பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 26 | வியாழக்கிழமை 08.02.2018 | கதிர் 95

## முல்லைத்தீவில் 103 தேர்தல் விதி மீறல் சம்பவங்கள்

முல்லைத்தீவு, பெப்.08

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் நேற்றுக் காலை வரை 103 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல் அலுவலகம் பக்கம் 18 »

# தேர்தல் நேரங்களில் விக்கி கபட நாடகம்

## சுமந்திரன் எம்.பி. பதிலடி



யாழ்ப்பாணம், பெப்ரவரி 08

“உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை கபட நோக்கம் கொண்டது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் இப்படித்தான் செயற்பட்டார். வாக்களித்த மக்களை மந்தையாடுகள் என அவர் வர்ணித்தமைக்கு அவரைத் தேர்தலில் நிறுத்தியவர்கள் என்றமுறையில் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகின்றோம்”.

- இவ்வாறு காட்டமாகக் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

பக்கம் 18 »

### ஊழல்வாதிகளைக் கைவிட்டு

# புதிய பயணம்!

### ஜனாதிபதி நேற்று அறிவிப்பு



கொழும்பு, பெப்.08

ஊழல் நிறைந்த இடத்திலிருந்து நாட்டை மாற்ற முடியாததாலேயே புதிய அணியில் இணைந்தேன். புதிய அணியும் ஊழல் நிறைந்த அணியாகவுள்ளது. இந்த நிலையில், பக்கம் 18 »

### இது ரகசியம் அல்ல!

நேற்று இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டிய விடயம் குறித்து மறுப்புக் குறிப்பு ஒன்றைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் அனுப்பி வைத்திருக்கின்றார். பக்கம் 03 »

# என் கருத்து சிலருக்கு உறைப்பது தேர்தல் காலங்களில் மட்டும்தான்

### சுமந்திரனுக்கு விக்கி உடனடிப் பதில்




யாழ்ப்பாணம், பெப்.08

தேர்தல் காலங்களில் மட்டுமே நான் கூறுவது சிலருக்கு உறைக்கின்றது. மற்ற நாள்களில் நான் கூறியவற்றை அவர்கள் வாசிப்பதில்லைப்போலும்.

இவ்வாறு சுமந்திரனின் பதிலுக்கு மறுபதில் வழங்கியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் பக்கம் 18 »

# கூட்டமைப்புக்குக் கூட இருந்தே குழி பறிக்கிறார் முதல்வர் விக்கி



### ரெலோ ஸ்ரீகாந்தா காட்டம்

சுழிபுரம், பெப்.08

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவோடுதான் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் பதவியில் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் அமர்த்தப்பட்டார். ஆனால் அவரோ இப்போது கூட இருந்தே கூட்டமைப்புக்குக் குழிபறிக்கத் தொடங்கியிருக் பக்கம் 03 »

## அடுத்த 48 மணிநேரம் வரை கடுமையான சட்டம் அமுல்

கொழும்பு, பெப்.08

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான பிரசாரம் புதன் நள்ளிரவு 12 மணியுடன் நிறைவுக்கு வந்த நிலையில், வாக்களிப்புத் தினம் வரையிலான அடுத்த 48 மணி நேரம் வரை கடுமை பக்கம் 18 »

# நாளை மறுதினம் தேர்தல்

### உச்சப் பரபரப்புடன் ஓய்ந்தது பிரசாரம்

கொழும்பு, பெப்.08

உள்ளூராட்சிச்சபைத்தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் யாவும் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்தன. தேர்தல் களத்தின் இறுதியாட்டம் நேற்று முழு நாளும் உச்சக்கட்டப் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

341 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் நாளைமறுதினம் 10ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் வெற்றிவாகை சூடுவதற்காக பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரு மாத காலத்துக்கு முன்பிருந்தே பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தன. பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்தே சூறாவளிப் பிரசாரம் ஆரம்பமானது. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் படைபட்டாளத்துடன் பக்கம் 18 »

## பிரியங்கவை பதவி நீக்கம் செய்யமுடியாது

### கூறுகிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, பெப்.08

வெறுமனே ஒரு காணொளியைவைத்துக் கொண்டு, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவைப் பதவியில் இருந்து நீக்கமுடியாது என்று இலங்கை இராணு பக்கம் 03 »

## ரூ. 2 கோடி பெறுமதியான 37 தங்கக் கட்டிகள் கடத்தல்

### கே.கே.எஸ். கடலில் இருவர் கைது



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.08

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் 2.2 கோடி ரூபா பெறுமதியான 3.7 கிலோ பக்கம் 18 »

## தேசியம், இறைமை, சுயநிர்ணயம் வலுவடைவதற்காக வாக்களியுங்கள்

### யாழ்.பல்கலை. மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.08

தமிழ் மக்களின் தேசியம், இறைமை, சுயநிர்ணயம் என்பவற்றுக்கு வலுச்சேர்க்கக் கூடிய வகையில் இந்தத் தேர்தலில் வாக்களியுங்கள்.

இவ்வாறு கோரிக்கை விடுத் பக்கம் 18 »

## ‘கழுத்தறுக்கும்’ பிரிகேடியரை காப்பாற்றினார் மைத்திரிபால!

### மீண்டும் பணியில் இணைக்க உத்தரவு



கொழும்பு, பெப்.08

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகரான பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவைப்பணியில் இருந்து இடைநிறுத்துமாறு விடுக்கப்பட்ட உத்தரவை நீக்கியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவரை மீண்டும் பணியில் இணைந்து கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்கம் 03 »

# வவுனியாவில் நேற்று கைக்குண்டுகள் மீட்பு!

வவுனியா, பெப்.08

வவுனியாவில் 15 இற் கும்மேற்பட்டகைக்குண்டுகளைப் பூவரசங்குளம் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். பக்கம் 18 »

## உரிய தீர்வு கிட்டாதுவிட்டால் தேர்தலைப் புறக்கணிப்போம்

### வடக்குத் தொண்டராசிரியர்கள் அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப்.08

தமக்கான நிரந்தர நியமனம் தொடர்பில் உரிய தீர்வு கிடைக்கப் பெறாவிட் பக்கம் 03 »

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் பௌத்த விகாரைகள் பெருகுவதற்கு பேசாமடந்தைகளான தமிழ்த் தலைமைகளே பொறுப்பு!

## ஐங்கரநேசன் குற்றச்சாட்டு





ஐக்கியதேசியக் கட்சி தனது உள்ளூராட்சித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்குக் கிழக்கில் ஆயிரம் பௌத்த விகாரைகளை அமைக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறது.

தமிழ் இன அழிப்புப் போரை நடத்திய அரசு இப்போது தமிழ்ப் பண்பாட்டுப் போரில் ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாகவே பௌத்த விகாரைகளைப் பெரும் எண்ணிக்கையில் அமைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் பௌத்த விகாரைகள் பெருகுவதற்கான பொறுப்பை நாடாளுமன்றத்தில் பேசாமடந்தைகளாக உள்ள நமது தமிழ்த் தலைமைகளே ஏற்கவேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

நல்லூர் பிரதேசசபைத் தேர்தலில் மாம்பழச் சின்னத்தில் சுயேச்சைக்குழுவாகப் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் அரியாலை பூம்புகாரில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்குஅவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஓர் இனத்தை அழிக்க வேண்டுமாயின் அந்த இனத்தைக் கொலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை.அந்த இனம் பேசுகின்ற மொழியையும், அந்த இனத்தின் உயிர் நாடியாக உள்ள பண்பாட்டையும் மெல்ல மெல்லக் கருவறுத்தாலேபோதும் அந்த இனம் கடைசியில் பெரும் பான்மை இனத்தில் கரைந்து அழிந்து போய்விடும்.

எமதுமதம் எமதுபண்பாட்டின் பிரிக்கமுடியாத ஒரு அங்கம். இதனால்தான் அரசு பௌத் தமதத்தை எம்மீது திணிக்கும் பண்பாட்டுப் போரை ஆரம்பித்துள்ளது.

புதிய அரசமைப்புக்கானமுன்மொழிவில் அரசு இலங்கையில் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை என்று மிகத் தெளிவாகக் தெரிவித்திருக்கிறது. இதற்கு, நாடாளுமன்றத்துக்கு நாம் அனுப்பி வைத்திருக்கும் தமிழ்த் தலைவர்கள் எந்த வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

மாறாக, புதிய அரசமைப்பை ஆதரித்தே பேசிவருகிறார்கள். உள்ளூராட்சித் தேர்தலில் தங் கள் கட்சிகள் தோற்றால் பௌத்தமதத்துக்கே முன்னுரிமை என்று கூறப்பட்டுள்ள புதிய அரசமைப்பை நிறைவேற்றமுடியாமல்போய்விடும் என்று கவலைப்படுகிறார்கள்.

பௌத்த மதம் பெரும்பான்மையாக உள்ள தென்னிலங்கையில், அங்குவாழுகின்ற மக்கள் விரும்பினால் அரசு பௌத்த மதத்துக்கு முன்னுரிமையையும்,சிறப்புரிமைகளையும் வழங்கலாம்.

ஆனால், தமிழ் பேசும் மக்களின்தாயகமான வடகிழக்கில் பௌத்தம் பெரும் பான்மையாக இல்லை.எமது தாயகம் மதச்சார்பற்ற ஒரு பிரதேசமாகவே விளங்கவேண்டும். எந்தமதத்துக்கென்றும் தனியான முன்னுரிமை இல்லாமல் இந்துசமயம், கத்தோலிக்கம், இஸ்லாம்,பௌத்தம் என்று எல்லாமதங்களும் ஒரேவிதமாகவே கருதப்படவேண்டும்.

இதனைநாடாளுமன்றத்தில் உள்ள தமிழ்த் தலைவர்கள் கேட்காத காரணத்தால்தான் எமது முதலமைச்சர்விக்னேஸ்வரன் இவற்றையெல்லாம் இடித்துரைத்துக்கேட்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேசசபைத் தேர்தலில் மாம்பழச்சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை மக்கள் வெற்றி பெறச் செய்தால், பிரதேசத்தின் அபிவிருத்தியை அவர்கள் திறம்படச் செய்வார்கள்.

அதேநேரம், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தணலாகஇன்றுவிளங்குகின்ற எமது முதலமைச்சருக்கும் பக்க பலமாக இருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டவர்கள் காணவில்லை என்றால் கொன்று விட்டீர்களா?

## வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் கேள்வி!



யாழ்ப்பாணம், செப். 08

காணாமல் ஆக்கப்பட்டோரை தேடிப்பார்த்தோம் காணவில்லை என்று ஜனாதிபதி மைத்திரி கூறியுள்ளார் என்றால் உங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டவர்களைக்கொன்றுவிட்டீர்களா என்று வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் கேள்வி யெழுப்பியுள்ளதுடன் அவ்வாறு கொலைக்குற்றத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பதையும் பகிரங்கமாக கூற வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு பேசும் போது காணாமல்ஆக்கப்பட்டோரைத் தேடிப் பார்த்தோம் காணவில்லை என இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளமை மாபெரும் இனப்படுகொலைக் குற்றத்தை சர்வசாதாரணமான பதிலுரைப் பின் மூலம் மூடி மறைக்கும் எத்தனிப்பாகவே அமைந்துள்ளது.

போர் முடிவின் இறுதிக்கால கட்டத்தில் எமது உறவுகளை எங்களது கைகளால் இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தோம். இது உலகறிந்த உண்மையாகும். அவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்கள் ஓரிருவர் அல்ல ஆயிரக்கணக்கிலான உறவுகளை கையளித்திருந்தோம்.

சுய நினைவாற்றலுடன் நல்ல தேக ஆரோக்கியமான நிலையில் முழு மனிதர்களாக எங்களால் உங்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் உறவுகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது?

வெளிப்படையாகவே ஆணித்தரமாக அவர்களில் எவரும் இல்லை என்று மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார் என்றால் ஒன்றில், தொடர்ந்தும் சட்டவிரோத தடுப்பு முகாம்களில் இரகசியமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் உயிரோடு இல்லாது போயிருக்க வேண்டும். அவ்வாறு உயிரோடு இல்லாது போயிருந்தால் பலாத்காரமாகவே அவர்களது உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறுதான் நடந்திருக்குமென்றால், எமது உறவுகளை கையேற்ற இலங்கை இராணுவத்தினர்,அவர்களை இரகசியத் தடுப்புமுகாம்களில்அடைத்து வைத்திருந்தவர்கள்,அவ்வாறு அடைத்து வைக்க உத்தரவிட்டவர்கள், அடைத்து வைக்கப்பட்டிருந்தவர்களை படுகொலை செய்தவர்கள், படுகொலை செய்யுமாறு உத்தரவிட்டவர்கள் என அனைவர் குறித்தும் மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாக அறிவிப்பு செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



நேற்று நெடுந்தீவில் உள்ளூராட்சித் தேர்தலின் இறுதிக் கட்டப் பிரசாரப் பணியில் கூட்டமைப்பின் பிரமுகர்களான ரெலோ செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகந்தா, மாகாண சபை உறுப்பினர்களான விந்தன் கனகரத்தினம், சபா.குகதாஸ் ஆகியோர் ஈடுபட்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்.

# வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றருள் செய்யக் கூடாதவை

கொழும்பு, பெப்.08

வாக்கெடுப்பு நிலையம் ஒன்றிலிருந்து 500 மீற்றர் பரப்பினுள் தடை செய்யப்பட்டுள்ள செயல்கள் பற்றித் தேர்தல்கள் ஆணைக்குழுபொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

ஒருவருடைய வாக்கினை கெஞ்சிக் கேட்டல், ஒருவருக்கு வாக்களிக்குமாறுபரிந்துகேட்டல், ஒரு கட்சிக்கு வாக்களிக்குமாறு அல்லது வாக்களிக்க வேண்டாமென கட்டாயப்படுத்துதல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளன.

மேலும், தேர்தலுடன் தொடர்புடைய ஏதேனுமொரு அலுவலக முறையான துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, கொடிகள், பதாகைகள், காட்சிப் பத்திரங்கள், அறிவித்தல் பத்திரங்கள், சித்திரம், வேட்பாளரொருவரின்புகைப்படம்அல்லது கட்சியின் சின்னம், சுயேச்சைக் குழுவின் சின்னம் என்பன காட்சிப்படுத்த முடியாது.

இதைவிட அப்பகுதியினுள் ஊர்வலம் நடத்தவோ கோசமிடவோ முடியாது.

பகிரங்கக் கூட்டங்களை நடத்தவோ கிளை அலுவலகத்தை பிரசார நடவடிக்கைக்குப் பயன்படுத்தவோ முடியாது என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் தொடர்பில் மைத்திரிபால பொறுப்பற்ற பதில்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

காணாமற்போனோரை எங்கு தேடியும் காணவில்லை என்று அசண்டையீனமாகக் கூறுவது ஒரு ஜனாதிபதியின் பதிலா என்று கேள்வி யெழுப்பியுள்ள முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினரும்ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், இப்படிப் பதில் கூறுகின்றவர் ஜனாதிபதிப் பதவியில் இருப்பதற்குப் பொருத்தமானவரா என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

காணாமற்போனவர்கள் தொடர்பில் ஜனாதிபதி விடுத்துள்ள அறிவிப்புத் தொடர்பில் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குக் கொடுத்த வாக்குறுதியையரசுநிறைவேற்றவில்லை. அதற்கமையவிசாரணைகளை மேற்கொண்டால்தான் காணாமற்போனோர்பற்றிய உண்மைகளை அறிந்துகொள்ள அல்லது வெளிப்படுத்த முடியும். அதை விடுத்து நான் தேடிப் பார்த்தேன் ஒருவரும் இல்லை என்று ஜனாதிபதி கூறுகிறார்.

காணாமற்போனோருக்கு எத்தனையாம் திகதி எந்த இடத்தில் என்ன நடந்தது என்று காணாமற்போனவர்களின் உறவினர்கள்ஜனாதிபதிக்குஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கின்றனர்.

ஆகவே விசாரணையைச் செய்யவேண்டியது அரசின் கடமை. அரசு எந்த விசாரணையையும் செய்யவில்லை.

அவ்வாறு எந்த விசாரணையும் மேற்கொள்ளாது தேடிப் பார்த்தோம் காணவில்லை என்று ஜனாதிபதி கூறுகிறார். இது ஒரு ஜனாதிபதி சொல்லும் பதிலா? ஒரு நாட்டின் ஜனாதிபதி சட்டம்ஒழுங்குக்குப்பொறுப்பாக இருக்கின்றார். நாட்டு மக்களின் பாதுகாப்பை அவரே உத்தரவாதப்படுத்தவேண்டும். நாங்கள் 23ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளனர்எனச்சொல்கின்ற போது அவர் தேடிப் பார்த்தோம் காணவில்லை என்றால் அவர்கள்எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது?

ஜனாதிபதியின் அசண்டையீனமான கருத்து இது. இவர்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறியுள்ளனர் – என்றார். (ஐ)

# மைத்திரியின் செயற்பாட்டை கண்டிக்கின்றது கூட்டமைப்பு

வெளிவிவகார அமைச்சால் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் பிரியங்க பெர்னாண்டோவை மீண்டும் பணியில் இணைந்து கொள்ள அனுமதியளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நெருங்கிவரும் சந்தர்ப்பத்தில் தீவிரவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவே ஜனாதிபதி, பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவைப் பதவியில் தொடர அனுமதித்துள்ளார் எனவும் சுமந்திரன் மேலும் கூறினார்.

மிகவும் அநாகரிகமான முறையில் நடந்துகொண்ட பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவைப் பணி இடைநிறுத்தம் செய்வதற்கு வெளிவிவகார அமைச்சு எடுத்த முடிவானது சரியானது எனக் குறிப்பிட்ட சுமந்திரன், பணி இடைநிறுத்தத்தின் பின்னரே விசாரணை இடம்பெற வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

## உரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டால் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலைத் தாம் புறக்கணிப்பதுடன் தற்கொலை செய்து கொள்வதைவிட வேறு வழியேதும் இல்லை என வடக்கு மாகாணத்தொண்டராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நேற்றுக் காலை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக மேற்கொண்ட கவனவீர்ப்புப் போராட்டத்தின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நீண்டகாலமாகத் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றி வரும் எமக்கு நிரந்தர நியமனம் இன்னமும்வழங்கப்படவில்லை. ஏற்கனவே 860 தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. தற்போது அதில் 180 பேருக்கு எதிர்வரும் 15ஆம் திகதி நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் வடக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள்புறக்கணிக்கப்பட்டுப் புதியவர்கள் பலர் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனத்தை நிறுத்துவதுடன் ஏற்கனவே வாக்குறுதி வழங்கியதற்கு அமைவாக வடக்கிலுள்ள சகல தொண்டராசிரியர்களுக்கும் ஒரே தடவையில் நிரந்தர நியமனம் வழங்க வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதற்கான நடவடிக்கைகள் எடுக்கத் தவறும் பட்சத்தில் நாம் தொடர்ச்சியான போராட்டங்களைமுன்னெடுக்கவுள்ளோம். முதற்கட்டமாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை நாமும் எமது குடும்பங்களும் புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம் – என்றனர். (ஐ-7)

## பிரியங்கவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் புலம்பெயர் தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை, பாதுகாப்பு ஆலோசகர் பணியில் இருந்து இடைநிறுத்துமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு, லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ரத்துச் செய்துள்ளதுடன், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை மீண்டும் பணியில் இணைந்து கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க,

வெறுமனே சமூக வலைத்தளக் காணொளி ஒன்றின் அடிப்படையில் அவர்கள், அதிகாரிகளை நீக்க முடியாது. விசாரணைகள் மட்டுமே முடிவு செய்யும். வெளிவிவகார அமைச்சும், இலங்கைத் தூதரகமும் விசாரணைகளை நடத்தும்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ, கேணலாக இருந்தபோது, மனிதாபிமானப் போர் நடவடிக்கையில் 11ஆவது கெமுனுவோச் படையின் கட்டளை அதிகாரியாக, முல்லைத்தீவின் பல கிராமங்களை மீட்டு, மகத்தான சேவை ஆற்றியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை இராணுவம் மீண்டும் ஒரு நம்பகமான காணொளி ஆதாரத்தை நிராகரிக்கிறது என்று இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பின் கீச்சகப் பதிவில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார்.

– இவ்வாறு காட்டத்துடன் சீறியிருக்கின்றார் கூட்டமைப்புப் பிரமுகரும், ரெலோ செயலாளர் நாயகமும் முன்னாள் எம்.பியுமான சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா.

சுழிபுரம் பகுதியில் நேற்று மாலை நடைபெற்ற கூட்டமைப்பின்பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டுபேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உள்ளூராட்சித் தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாள்களே இருக்கையில், கூட்டமைப்புக்கு எதிராகக்காட்டமானவிமர்சனங்களை அவர் முன்வைத்திருக்கின்றமை முன்னாள் நீதியரசர் என்ற முறையிலும்வடமாகாண முதலமைச்சர் என்ற ரீதியிலும் மிகவும் கண்டனத்திற்குரிய காரியமாகும்.

அவர், தமிழர்களின் தலைமைத்துவத்திற்கு யாரைக் கொண்டு வர முயற்சிக்கின்றார் என்பது விளங்கவில்லை. அந்த நபர் அவரேதானா அல்லது வேறு யாருமா என்பது கூடத் தெளிவாக வெளிப்படுத்தப்படவில்லை.

வடக்கு, கிழக்கில் ஆயிரம் விகாரைகள் கட்டப் போவதாக ஐ.தே.கட்சி அறிவித்திருக்கின்றமை குறித்து மேடைக்கு மேடை கண்டித்துக் கொண்டிருக்கிறோம். இந்த விடயத்தில் வீணாகத் தேன்கூட்டுக்குக் கல்லெறியும் வேலையைச் செய்ய வேண்டாம் என ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறோம். ஆனால்தனது சொந்த உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் விக்னேஸ்வரனுக்கு இது எவையும் தெரியாமல் இருக்கின்றன.

ஒரு விடயத்தை அவருக்கு அழுத்தம் திருத்தமாகக் கூறிவைக்க விரும்புகிறோம். நேர்மையான மனிதராக எங்களால் கருதப்பட்டு வந்திருக்கும் அவர் நேர்மையுள்ளவராக இருந்தால், கூட்டமைப்பின் முதுகில் குத்தாமல் அரசியல் துணிச்சலுடன் அதனை எதிர்ப்பதற்கு முன்வரவேண்டும். அவரைச் சந்திக்க – எதிர்கொள்ள – நாம் தயார். அது மாத்திரமல்ல, ஒன்றில் அவர் முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு வரவேண்டும். அல்லது மாகாண சபையில் தாமாகவே ஒருநம்பிக்கைவாக்கெடுப்பைக் கோரவேண்டும். அப்படிச்செய்து அவர் பார்க்கட்டும்.

அவரின் அரசியல் துரோகத்தன நடவடிக்கைகளை இனி மேலும் சகித்துக் கொண்டிருப்பதற்கு நாங்கள் தயாரில்லை.

கூட்டமைப்பின் வேண்டுகோளை ஏற்று அவரைப் பதவியில் அமர்த்திய தமிழ் மக்களுக்கு அவர் நம்பிக்கைத் துரோகம் இழைக்கக் கூடாது.

தமிழ்க்காங்கிரஸின்பிரமுகர் சட்டத்தரணி சுகாஸ் இன்று (நேற்று) கிட்டு பூங்கா கூட்டத்தில் பேசிய உரையை அறிந்து கொண்டேன்.

ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அரசியல்செயற்பாடுகள்குறித்து விமர்சிக்கும்சுமந்திரன்அதுகுறித்துத்தம்முடன் பகிரங்க விவாதம் நடத்த வருவாரா என்று சுகாஸ் சவால் விடுத்திருக்கின்றார்.

இது கூட்டமைப்புக்கு விடுக்கப்பட்ட சவால். இதை நானே ஏற்கிறேன். சட்டத்தரணி சேவையில்44ஆண்டுகள்பணிபுரிந்த நான் அவருடன் விவாதம் நடத்துவது பொருத்தமற்றது என்றாலும், நான் அந்தச் சவாலை ஏற்கிறேன். எப்போது, எங்கு நடத்துவது என்பதை அவரே தீர்மானித்து அறிவிக்கட்டும். – என்றார். (உ)

## ‘கழுத்தறுக்கும்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் சுதந்திர தினத்தன்று, லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களுக்கு அச்சுறுத்தல்விடுத்திருந்தார்பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ.

இதுதொடர்பானகாணொளி ஊடகங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், பாதுகாப்பு ஆலோசகர்பதவியில்இருந்துபிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவை இடைநிறுத்துமாறு நேற்று முன்தினம் இலங்கை வெளிவிவகார அமைச்சு உத்தரவிட்டது.

அத்துடன் இது குறித்து இலங்கையில் இராணுவ அதிகாரிகளை உள்ளடக்கிய குழு விசாரணையை உடனடியாக ஆரம்பிக்கும் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருந்தது.

இந்த இடைநிறுத்த உத்தரவைநேற்றுரத்துச்செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு ஆலோசகர் பணியில் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ தொடர்ந்து ஈடுபட அனுமதி அளித்துள்ளார்.

இது தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்து, முன்னதாக, இந்தக்குற்றச்சாட்டுதொடர்பான விசாரணைகள் முடியும் வரை, அவரை இடைநிறுத்தப்பட்டிருந்தார். எனினும், அவரை மீண்டும் இன்று (நேற்று) தொடக்கம் பணியில் இணைக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்று கூறியுள்ளார்.

அதேவேளை, பாதுகாப்பு ஆலோசகர் அவமதிப்பான நடத்தையில் ஈடுபட்டதாகக் கூறப்படும்சம்பவம்சார்ந்தகாணொளி தொடர்பில், ஒருபக்கச் சார்பான நடவடிக்கை எடுக்க முடியாது என்றும், இந்தக் காணொளி தொடர்பாகத் துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் என மேஜர் ஜெனரல் ரொஷான் செனிவிரத்ன தெரிவித்தார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*“தான்கூறியகருத்தில்உறுதியாக நிற்பவர் கூட்டமைப் பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் என்பது சிலாகிக்கப்பட வேண்டியதுதான்”* – என்றே நேற்று இப்பத்தி ஆரம்பித்தது.

அதை உறுதிப்படுத்துமாற் போல அவரது இந்த மறுப்புக் குறிப்பும் அமைந்துள்ளது.

*“யாழ்ப்பாண மக்கள் சமயோசிதமாகத்தான் வாக்களிப்பார்கள் என்று கூறவந்த அவர், 1982 இல் நடந்த முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட – அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தை விட – ஸ்ரீல.சு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட கொப்பேகடுவயாழ். மாவட்டத்தில் அதிக வாக்குகளைப்பெற்றார்என்று(மீளவும்) கயிறு விட்டிருக்கின்றார்”* – என நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அது குறித்து தாம் நேற்று அனுப்பிய மறுப்பில் – *“நான் தவறு இழைக்கவில்லை. ஆனால், அது உங்கள் பக்கத்தில்தான். எனது 3 நிமிடங்கள் 30 செக்கன் பேச்சை மிகக் கவனமாகக் கேளுங்கள். நான் ‘யாழ். மாவட்டம்’ என்று கூறவில்லை. வடக்கு மாகாணம் என்றேகூறினேன். முழுவடக்கு மாகாணத்திலும் பொன்னம்பலத்தைவிட கொப்பேகடுவகூடுதலான வாக்குகளைப்பெற்றார்.*

*“தவறை ஏற்றுக்கொண்டு நாளைய முதல் பக்கத்தில் மன்னிப்புக் கோரும் தாராளம் உங்களுக்கு உண்டா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்”* – என்று தெரிவித்துள்ளார்.

அவரது பேச்சை கூர்ந்து செவிமடுத்தோம். அவர் கூறியமைசரி. அவர் ‘யாழ். மாவட்டத்தில்’என்றுகூறவில்லை. ‘வடக்கு மாகாணத்தில்’ என்றுதான் கூறியிருந்தார்.

கிளிநொச்சியையும் உள்ளடக்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில் குமார் பொன்னம்பலம் (87, 263), ஹெக்டர் கொப்பேகடுவ (77,300) விடவும் சுமார் பத்தாயிரம் வாக்குகளை அதிகம் பெற்றிருந்தார்.

ஆனால் வன்னியையும் உள்ளடக்கிய வடக்கு மாகாணத்தில் சுமந்திரன் சுட்டிக்காட்டியபடி குமார் பொன்னம்பலத்தை (98,784) விடவும் கொப்பேகடுவ (100,521) சுமார் ஆயிரத்து 737 வாக்குகள் அதிகம் பெற்றிருந்தார்.

எமது நேற்றைய பத்தியில் சுமந்திரன் குறித்து குறிப்பிட்ட தவறினால் அவருக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு எமது மனவருத்தத்தைப் பதிவு செய்கிறோம்.

- மின்னல் -

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
பிளாஸ்ரிக் உற்பத்தி, பிளாஸ்ரிக் திருத்த வேலை, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## இவரா பாரபட்சமற்ற ஜனாதிபதி?

*'இனம், மதம், கட்சி, நிற பேதமின்றி நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் மக்கள் அனைவரினதும் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறேன்.''* - என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொதுவில் பிரதேசத்தில் நடந்த ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கூறியிருந்தார்.

அது பற்றிய செய்தி நேற்றைய 'காலைக்கதிர்' நாளிதழில் வெளியாகியிருந்தது.

அந்தச் செய்தி அச்சாகிய மை காய்வதற்கு இடையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வாறு இனம், மதம், கட்சி, நிற பேதமின்றி செயற்படுகிறாரா என்பதைக் கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் அவர் நடந்து கொண்டிருக்கிறார்.

லண்டனில் அமைதி வழியில் போராட்டத்தில் ஈடுபட்ட புலம்பெயர் தமிழர்களைப் பார்த்து "கழுத்தை அறுத்து விடுவேன்" என சைகை மூலம் காட்டி எச்சரித்த இராணுவ பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ குறித்துக் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்தும் வகையில் இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்புத்துறை அதிகாரியான பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோ நடந்து கொண்ட விதம், பிரித்தானியச் சட்டத்தின் கீழ் குரோதத் தனமான குற்றம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒரு கையின் ஏனைய விரல்களை மடக்கிக் கொண்டு நடுவிரலை மாத்திரம் நிமிர்த்தி, அந்த விரலை மேலே கீழே தள்ளுவதுபோல சைகை செய்வதே, ஒருவரை அகௌரவப்படுத்தி, அவமானப்படுத்தி, கீழ்தரமாகக் கையாளும் நடத்தை என ஐரோப்பிய நாடுகளில் வியாக்கியானப்படுத்தி தண்டிக்கப்பட கூடியது.

அத்தகைய ஐரோப்பிய நாட்டில் கழுத்தை அறுத்துத் தொலைத்துடுவேன் என்று பகிரங்கமாக அச்சுறுத்துவது - அதுவும் அதுபற்றிய காணொலி பகிரங்கமாக, சாட்சியாக அதிகம் பரவியிருக்கின்றமை - மிகக் கண்டனத்துக்கும் கண்டிப்புக்கும் உரிய விடயமாகும்.

இந்த அதிகாரியின் நடவடிக்கை பகிரங்கமாக சமூக வலைத்தளங்களில் விரைவாகப் பரவி கடும் கண்டனத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ள சூழலில் -

அவ்வாறு நடந்து கொண்ட பிரிகேடியரை லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் 'மினிஸ்டர் கொன்சியுலர் (பாதுகாப்பு)' என்ற இராஜதந்திரப் பதவியில் இருந்து உடனடியாக இடைநிறுத்தி, கொழும்பு வெளிவிவகார அமைச்சு லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அறிவித்தது.

இந்த அறிவித்தல் வந்த வேகத்தைக் கண்டு புலம்பெயர் தமிழர்கள் கூட மலைத்துப் போய் விட்டார்கள். அதிகாரத்தில் இருப்பது 'நல்லாட்சி அரசுதான்' என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டிய மாதிரித்தான் அந்த அதிரடி நடவடிக்கை அமைந்தது.

ஆனால், அந்த நடவடிக்கை வந்த வேகத்திலேயே வாபஸ் பெறப்பட்டுவிட்டது. அதிகாரத்தில் இருப்பது பெயருக்குத்தான் 'நல்லாட்சி அரசு', அது வழமையான சிங்கள, பௌத்த பேரினவாத அரசுதான் - என்பதை நிரூபிக்குமாற் போல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இது விடயத்தில் அவசரமாக நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

புலம்பெயர் தமிழரை சைகை மூலம் அச்சுறுத்திய பிரிகேடியரை சேவையில் இருந்து விலக்கும்படி வெளிவிவகார அமைச்சு வழங்கிய உத்தரவை இரத்துச் செய்து பணிப்புரை விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அதாவது, அந்த பிரிகேடியர் மீது நடவடிக்கை எடுத்த வெளிவிவகார அமைச்சின் செயற்பாட்டைத் தாம் தலையிட்டு தள்ளுபடி செய்திருக்கின்றார் அவர்.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் சமயத்தில் ஓர் இராணுவ அதிகாரி மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தால் அது தெற்கில் அரசியல் ரீதியாகப் பெரும் பின்னடைவைத் தரும் என அஞ்சியே இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் உத்தரவை ரத்துச் செய்திருக்கின்றார் அவர்.

பிரிட்டனில், பகிரங்கமாக, பல்லாயிரம் பேர் பார்த்திருக்க, காணொலியின் காட்சியில் சிக்கக் கூடிய வகையில், புலம்பெயர் தமிழரைக் கழுத்தை வெட்டிக் கொல்வேன் என்று அச்சுறுத்திய பிரிகேடியரை, உள்ளூராட்சித் தேர்தலுக்காக காப்பாற்ற முனைகின்றார் நமது நாட்டின் ஜனாதிபதி.

இராணுவ அதிகாரிக்கு எதிரான இந்த ஒழுக்காற்று நடவடிக்கைக்கே முட்டுக்கட்டை போடும் இந்த ஜனாதிபதியா தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்காக நடக்கக் கூடிய சர்வதேசப் பங்களிப்புடனான நீதி விசாரணைக்கு இணங்கி ஒத்துவரப் போகின்றார்?

இவரை நம்பி, அமைதித் தீர்வு முயற்சிகள், ஐ.நா. பங்களிப்புடனான சர்வதேச விசாரணைப் பொறிமுறை போன்ற வற்றுக்காகப் பிரசாரம் செய்து காத்திருக்கும் தமிழ்க் கூட்டமைப்பு கடைசியில் இவ் விடயத்தில் ஏமாறப் போகின்றது மட்டும் நிச்சயம்.

# துணிவில்லாத கூட்டமைப்பு பதுங்கி இருந்து விமர்சனம்

## சந்திரகுமார் காட்டம்

கிளிநொச்சி, பெப்.08

துணிந்து நின்று உண்மைகளைப் பேசி, ஜனநாயக வழியில் விமர்சனங்களை முன்வைக்க முடியாத கிளிநொச்சி தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் என் மீதும் எமது வேட்பாளர்கள் மீதும் அவதூறுகளை அநாமதேயத் துண்டுப் பிரசுரங்களாக அச்சிட்டுப் பதுங்கியிருந்து தெருக்களில் எறிந்து வருகின்றனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் பொதுச் சந்தையில் சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் தன்னுடைய வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

கருத்துக்களை கருத்துக்களால் வெல்ல முடியாத கோழைகளின் செயற்பாடாகவே நான் இந்த அவதூறு அநாமதேயத் துண்டுப் பிரசுரங்களைப் பார்க்கின்றேன். துணிவிருந்தால் கிளிநொச்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்னுடன் என் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பகிரங்க விவாதத்துக்கு வர முடியுமா?

இலங்கைத் தீவில் கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரமே இந்தக் கேவலமான அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும். இவ்வாறான இழிவான செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற இந்தக் கிளிநொச்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சேர்ந்தவர்கள் ஆட்சி அதிகாரங்களுக்கு வருகின்றபோது அவர்களுடைய செயற்பாடுகள் எவ்வாறிருக்கும் என மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஒரு ஜனநாயக நாட்டில் மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட அரசியல் தரப்புக்களை இன்னொரு தரப்பு விமர்சனம் செய்வது வழமையானது. ஆனால் அந்த விமர்சனங்கள் நாகரிகமானதாக, உண்மையானதாக இருக்கவேண்டும். இதுவே ஒரு நாகரிகமான அரசியல்.

தேர்தல்களில் மக்கள் தங்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யவுள்ளவர்கள் உண்மையானவர்களாக, நேர்மையானவர்களாக, ஊழலற்ற வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை மேற்கொள்வார்களா என ஆராய்ந்து வாக்களிக்க வேண்டும். – என்றார்.

ஓய்வு பெற்ற கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் மோ. அருட்சோதி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வேட்பாளர்களான சு. மனோகரன், ஞானகலா, தவநாயகி மற்றும் இராமச்சந்திரன், பேரம்பலம் ஆகியோரும் பொது மக்களும் கலந்துகொண்டனர்.

# வெளியேறும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள்; இலங்கை ரூபாவின் மதிப்பு கடும் வீழ்ச்சி

கொழும்பு, பெப். 08

இலங்கையில் அரசியல் உறுதித்தன்மையில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதால், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டிய அரசியல் குழப்பங்கள், இலங்கையின் அரசியலில் உறுதியற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. இது நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

இதனால் அரசாங்கப் பங்குச் சந்தையில் இருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

அத்துடன், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பும் சரியத் தொடங்கியுள்ளது.

கடந்த வாரத்தின் இறுதி வேலை நாளான, பெப்ரவரி 2ஆம்திகதி, அமெரிக்க டொலர் ஒன்றின் மதிப்பு, 155.94 ரூபாவாக இருந்தது.

சுதந்திர தின விடுமுறைகளுக்குப் பின் நேற்றுமுன்தினம் வங்கிகள் திறக்கப்பட்ட போது, அமெரிக்க டொலர் ஒன்றுக்கான இலங்கை ரூபாவின் மதிப்பு, 156.13 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.



அண்மைய நாள்களாக இலங்கை ரூபாவின் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்மக்களுடன் எமக்கு எந்தப் பிரச்சினையுமில்லை

கொழும்பு, பெப். 08

நாட்டில் உள்ள தமிழர்களுடன் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நாட்டிற்கு வெளியில் இருக்கும் இலங்கை வர விரும்பாத பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் அணிகளுடன்தான் எமக்குப்பிரச்சினைகள் என்று ஸ்ரீலங்காபொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த அரசிடம் நாங்கள் விசேட உதவிகள் எதனையும் கேட்கப் போவதில்லை என சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் கூறுகிறார்.

நாங்கள் இந்த அரசிடம் மண்டியிடமாட்டோம். நாங்கள் அரசிடம் பிச்சை கேட்க வில்லை. 2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேனவை நாற்காலியில் அமரவைக்க மைத்திரியும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு தாம் கோருவதாகவும் சமஷ்டிக்கு அப்பால் சென்று தீர்வை வழங்குவதாக உறுதியளித்ததாகவும் சுமந்திரன் கூறியுள்ளார்.

இதனைக் கோரத் தமக்கு உரிமை இருப்பதாகவும் சுமந்திரன் கூறியுள்ளார். எனினும் அரசு இதுவரை அதற்கு எந்த பதிலையும் வழங்கவில்லை.

அதேபோல், நாட்டில் உள்ள தமிழர்களுடன் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நாட்டிற்கு வெளியில் இருக்கும் இலங்கை வரவிரும்பாத பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் அணிகளுடன் தான் எமக்கு பிரச்சினைகள் உள்ளன.

போர் முடிவுக்கு வந்ததன் மூலம் முக்கியமாகச் சுதந்திரம் பெற்றவர்களாக வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்களே உள்ளனர்.

அங்குள்ள பிள்ளைகளின் கழுத்தில் சயனைட் குப்பிகளைத் தொங்க விட எவரும் இல்லை. அங்குள்ள பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.

உயர் தரத்தில் வணிகப் பிரிவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவனே முதலிடம் பெற்றார். அந்தளவுக்கு நிலைமைகள் மாறியுள்ளன.

எனினும் இலங்கையில் இருந்து சென்று வெளி நாடுகளில் குடியேறியுள்ள சில அணியினர் பிரிவினைவாதத்தைத் தூண்டி வருகின்றனர் எனவும் கெஹெலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

## நாளை

09.02.2018
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : அனுசம் மு.இ8.15 வரை
திதி : நவமி பி.ப 3.59 வரை
சுபநேரம்: 6.35 – 8.05 வரை
இராகுகாலம்:11.05 – 12.35 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவின் குடியுரிமையில் குறிவைக்கிறார் ரணில்!

## சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. எதிர்ப்பு



கொழும்பு, பெப். 08

மோசமான குற்றங்களில் ஈடுபடுபவர்களின் குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்கு ஏற்ற வகையில், அரசமைப்பின் 81 ஆவது பிரிவில் திருத்தம் செய்வதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் உதவ வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் முன்னைய ஆட்சிக்கால முறைகேடுகள் குறித்து விசாரித்த ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடந்த சிறப்பு விவாதத்தின்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

முன்னைய ஆட்சிக்கால ஊழல்கள், மோசடிகள் குறித்து விசாரித்த அதிபர் ஆணைக் குழு, மோசமான குற்றங்களில் ஈடுபட்டவர்களின் குடியியல் உரிமைகளைப் பறிக்கும் வகையில், அரசமைப்பின் 81 ஆவது பிரிவில் திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

அவ்வாறு திருத்தம் செய்வதற்கு கட்சித் தலைவர்கள் தயாரா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை, எந்தவொரு நபரினதும், குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்கான நகர்வுகளுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒத்துழைக்காது என்று அந்தக் கட்சியைச் சேர்ந்த அமைச்சரான மஹிந்த அமரவீர நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் சிறி மாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமைகள் நியாயமற்ற வகையில் பறிக்கப்பட்டன. எனவே எவருடைய குடியியல் உரிமைகள் பறிக்கப்படுவதற்கும் நாங்கள் விரும்பவில்லை. தவறு செய்தவர்களை சட்டரீதியாக கையாளலாம் என்று தெரிவித்தார்.

அத்துடன், மஹிந்த ராஜபக்ஷ வினதோ அல்லது வேறு எவருடையதோ குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்கு, தமது கட்சி துணைநிற்காது என்று ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசநாயக்கவும் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் சர்வதேச உலக சுகாதார தின வைபவம்!

உலக சுகாதார தின சர்வதேச வைபவம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி கொழும்பு தாமரைத்தடாக அரங்கில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச சுகாதார தினத்தை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரையொன்றும் வெளியிடப்படவுள்ளது.

உலக சுகாதார அமைப்பால் இலங்கையில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள சுகாதார தின சர்வதேச வைபவம் தொடர்பான பேச்சு சொன்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் நேற்று முன்தினம் காலை சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

இதன்போது இந்தத் தீர்மானங்கள் எட்டப்பட்டன. உலக சுகாதார தின வைபவத்தில், உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டொக்டர் பெட்ரொஸ் ஆதனம் கெப் ரேசஸ் மற்றும் அந்த ஸ்தாபனத்தின் தெற்கு மற்றும் கிழக்காசிய நாடுகளுக்கான பணிப்பாளர் பூனம் வெற்றி பால் சிங் ஆகியோர் உட்படப் பல நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

# முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் மீது தாக்குதல்!

கொழும்பு, பெப். 08

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சம்மாந்துறை பிரதேச சபைக்காக போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு தாக்கப்பட்டு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீரமுனை வட்டாரத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் யானைச் சின்னத்தில் போட்டியிடும் றம்சீன் என்பவரே இவ்வாறு அடை யாளம் தெரியாதவர்களால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

எனினும், குறித்த வேட்பாளர் யாரால் தாக்கப்பட்டுள்ளார் என்பது தொடர்பில் தகவல் எதுவும் வெளியாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரித்தானிய பாதுகாப்பு ஆலோசகர் கடற்படையுடன் தளபதி சந்திப்பு!



இலங்கைக்கான பிரித்தானிய பாதுகாப்பு ஆலோசகர் கேப்டன் பிரேஸர் நிகல்ஸன் மற்றும் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் கடற்படை தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் தொடர்பில் சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் சந்திப்பை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான பிரித்தானிய துணை தூதுவரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பட்டப் படிப்பை முடித்தார் மஹிந்தவின் மருமகள்!

கொழும்பு, பெப். 08

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கடைசி மகன் ரோஹித ராஜபக்ஷவின் காதல் குறித்து பல்வேறு கதைகள் பேசப்பட்டு வந்தன.

இந்த நிலையில் அவரது காதலி டட்டியானா நேற்றை தினம் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார்.

பட்டத்தை பெற்ற டட்டினாவுடன் ரோஹித எடுத்துக் கொண்ட புகைப்படத்தை பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளார்.

காதலிக்கு பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் பேஸ்புக்கில் பதிவிட்டு தனது வாழ்த்தினை ரோஹித தெரிவித்துள்ளார்.



மருமகளாக வரப்போகும் டட்டினா பட்டப்படிப்பை நிறைவு செய்தமை குறித்து ராஜபக்ஷ குடும்பத்தினர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

## சிவராத்திரி விழா

கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வீதி ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஆலய சிவராத்திரி விழா எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

எனவே, அன்றிரவு 7 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரை நான்கு ஜாம சிறப்புப் பூசைகளும் ஆலய ஸ்ரீ சக்தி கருமாரி இசைக் குழுவினரின் ஏற்பாட்டிலான இசைக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

# மழையுடன் கூடிய காலநிலை தொடரும்!

நாட்டின் பெரும்பாலான இடங்களில் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கரையோரப் பகுதிகளில் காலை வேளையில் சிறிதளவு மழை பெய்யலாம் எனவும் மேற்கு, சப்ரகமுவ, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் சில பகுதிகளில் காலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக காற்று வீசக்கூடும் எனவும் இடி மின்னலிலிருந்து பொதுமக்கள் அவதானமாகச் செயற்படுமாறு திணைக்களம் வேண்டிக் கொண்டுள்ளது.

# கரைச்சிக் குடியிருப்பு பிரதான வீதிப் பாலத்தை புனரமைப்புச் செய்யுமாறு மக்கள் கோரிக்கை!



முல்லைத்தீவு, பெப். 08

முல்லைத்தீவு, கரைச்சிக் குடியிருப்பு பிரதான வீதி பாலத்தை உடனடியாக புனரமைப்புச் செய்யவேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சிக் குடியிருப்பு பாலம் சேதமடைந்துள்ள நிலையில் வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளினால் ஏ.35 பிரதான வீதி போக்குவரத்து ஒரு வருடத்திற்கு முன்னர் தடை செய்யப்பட்டிருந்தது.

இதன்காரணமாக இந்த வீதியால் போக்குவரத்து செய்ய முடியாது, மாற்றுவழியைப் பயன்படுத்துவதில் தாம் சிரமப்படுகின்றோம் எனப் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, அந்தப் பகுதி விவசாய நிலங்களில் நெற் பயிர்ச்செய்கையினை மேற்கொண்ட விவசாயிகள் நெல் அறுவடை செய்யப்பட்ட நெற்களை இந்த வீதியால் கொண்டு செல்ல முடியவில்லை எனவும் குறிப்பிடுகின்றனர்.

மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடிக் கவனம் செலுத்தி கரைச்சிக் குடியிருப்பு பாலத்தை புனரமைப்புச் செய்து போக்குவரத்தை சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேர்தல் சுவரொட்டி ஒட்டிய இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.08

நல்லூர் பிரதேச சபைத் தேர்தலில் மாம்பழம் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவின் ஆதரவாளர்கள் இருவர் கடந்த திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் பகுதியில் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டியவேளையிலேயே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 50 சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் கூறினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிரசுரங்கள் ஒட்டிய இருவர் கைது

காத்தான்குடி,பெப்.08

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்ட விதிகளை மீறும் வகையில், சுவரொட்டிகளை ஒட்டிய குற்றச்சாட்டின் பேரில், காத்தான்குடி நகரில் நேற்றுமுன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனரெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில், மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் நேற்றுமுன்தினம் இரவு, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல் கடமைகளுக்கான விசேட நகர உலாவில் பொலிஸார் ஈடுபட்டிருந்தபோது, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

# சுதந்திரமான, நீதியான தேர்தலை நடத்த உத்தரவாதம் வேண்டும்

காத்தான்குடி,பெப்.08

சுதந்திரமான, நீதியான தேர்தலை நடத்த உத்தரவாதப்படுத்த வேண்டும் என, நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம்.அப்துர் ரஹ்மான் கோரிக்கை விடுத்துள்ளார்.

காத்தான்குடியில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்-

எமது வேட்பாளர்களில் ஒருவரின் வீட்டில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது ஒரு சாதாரண விடயமாகத் தெரியவில்லை. மிகக் கவனமாகத் திட்டமிடப்பட்டுள்ளது. கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வகையில், வேட்பாளர், வீட்டில் உள்ள நேரத்தைப் பார்த்து, இலக்கு வைக்கப்பட்டுள்ளது.




தேசிய முன்னணியின் தவிசாளர்

தாக்குதல் நடத்தப்பட்டுள்ள விதத்தையும் இது ஏற்படுத்தியுள்ள சேதத்தையும் பார்க்கின்றபோது, இது உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு கொலை முயற்சியாகத்தான் எங்களுக்குத் தெரிகின்றது.

இந்த வன்முறைகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவ்வாறானசம்பவங்கள் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்படல் வேண்டும். சுதந்திரமான, நீதியான தேர்தலை நடத்த உத்தரவாதப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். (ப)

# வேட்பாளரின் வீட்டில் குண்டுத் தாக்குதல்



காத்தான்குடி,பெப்.08

காத்தான்குடி நகர சபைத் தேர்தலில், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் சார்பில் மேலதிகப் பட்டியல் வேட்பாளரான ஏ.எம்.முகம்மட் பர்சஸாத் என்பவரின் வீட்டின்மீது, நேற்றுமுன்தினம் அதிகாலை குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதிய காத்தான்குடி, தக்வா நகரத்திலுள்ள வேட்பாளரின் வீட்டில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதலின்போது நுழைவாயில் கதவு உடைந்து சேதமடைந்துள்ளதுடன், வீட்டின் முன் பகுதியும் சேதமடைந்துள்ளது. இக்குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றபோது, வேட்பாளர் உட்பட அவரது மனைவி, பிள்ளைகள் வீட்டில் இருந்துள்ளனர். எனினும் உயிர்ச் சேதங்கள் எவையும்இடம்பெறவில்லை.

இச்சம்பவம் தொடர்பில், காத்தான்குடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, ஸ்தலத்துக்கு விரைந்த காத்தான்குடிப் பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டதுடன், பொலிஸ்தடயவியல்அதிகாரிகளும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ப)

# கட்சித் தாவல், வாக்குகளில் சரிவை ஏற்படுத்மாட்டாது

## சுதந்திரக் கட்சி அமைப்பாளர்



மட்டக்களப்பு,பெப்.08

பட்டிருப்புத் தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைப்பாளர் இரா.சாணக்கியன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தாவிக்கொண்டமை, மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் மக்களின் வாக்குகளில் சரிவை ஏற்படுத்தாது என்று, மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ரீ.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி மிக்க நாட்டைக் கட்டியெழுப்புவதில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் இந்த வேளையில், நாட்டில் ஊழல் ஒழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. ஊழல் எனும் வார்த்தைக்கு, நாட்டில் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்த உண்மையா கும்.

ஜனாதிபதியோடு இணைந்து சாணாக்கியன் பணியாற்ற முடியாமல் போனமை கவலையளிக்கும் செயற்பாடாகவே நான் கருதுகின்றேன். நல்லாட்சிக்கு அவருடைய பங்களிப்பு இல்லையென்பதை உண்மையில் அது எடுத்துக்காட்டுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

# ஹக்கீம் அழகாகப் பொய் பேசக்கூடியவர்

## சொல்கிறார் அமீர் அலி

ஏறாவூர், பெப்.08

அழகாகப் பொய் பேசிப் படங்காட்டக் கூடியவர் என்றபடியால் ரவூப் ஹக்கீம் பேசி ஏசிக் கொண்டிருக்கின்றார் எனக் கிராமியப் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

மீராவோடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஏறாவூரில் மரச்சின்னத்தில் வெற்றி பெற்று வந்த மௌலானாவுக்கு மரத்தில் கேட்பதற்கு வரம் கிடைக்கவில்லை தராசில் கேட்கின்றார். அவரை எதிர்த்து அதே கட்சியில் இருந்து முதலமைச்சராக வந்த நசீர் அஹமட் ஐக்கிய தேசிய முன்னணியில் போட்டியிடுகின்றார்.

ஏறாவூரில் தராசுக்கும் யானைக்கும் பேச வேண்டும். காத்தான்குடியில் தராசுக்கு பேசவேண்டும். வாழைச்சேனையில் மரத்துக்குப் பேச வேண்டும். வாய் தவறாமல் பேசுகின்றார். அழகாகப் பொய் பேசக் கூடியவர், அழகாகப் படங்காட்டக் கூடியவர் என்ற படியால் பேசி ஏசிக்கொண்டிருக்கின்றார்.

அரசியல் அதிகாரம் உயரலாம், பணியலாம், இல்லாமல் போகலாம் ஆனால், நாங்கள் நாங்களாகவே இருந்து கொள்ள வேண்டும். அரசினால் கிடைக்கும் பணத்தைக் கல்விக் கூடங்களுக்காக அதிகமாகச் செலவு செய்திருக்கின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ப)

# அரிசி உண்பதற்காக பாடசாலை கட்டடத்தை உடைத்தது யானை

மட்டக்களப்பு, பெப். 08

அரிசி,உப்பு என்பவற்றை உண்பதற்காக யானை பாடசாலைக் கட்டடத்தை உடைத்துச் சேதமாக்கியுள்ளது.

மட்டக்களப்பு பட்டிருப்புக் கல்வி வலயத்தின் போரதீவுப்பற்றுக் கோட்டப் பிரிவிலுள்ள மண்டூர் 39 ஆம் கொலனி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைச் சமையலறைக்கு வந்த காட்டு யானையால், கட்டடம் சேதமாக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு மேற்படி பாடசாலைக்குச் சென்ற காட்டு யானை அங்கு சமையலறையில் மாணவர்களின் காலை உணவைத் தயாரிப்பதற்காக பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த உப்பு, அரிசி என்பனவற்றைச் சமையலறையை சேதமாக்கி, அங்குள்ள உலர் உணவுகளை உண்டு விட்டுச் சென்றுள்ளது எனப் பாடசாலை அதிபர் ரீ. திருவருட்செல்வன் தெரிவித்துள்ளார். (ப)

# மூதாட்டியின் குடிசை தீக்கிரை!

ஏறாவூர், பெப்.08

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டான்சேனையில் மூதாட்டி ஒருவரின் குடிசை தீயினால் கருகி நாசமடைந்துள்ளது என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் முறக்கொட்டான் சேனை சாத்திரியார் வீதியை அண்டி வாழும் பொன்னையா பிள்ளையம்மா என்பவரின் குடிசையே எரிந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்றபோது அக்குடிசையில் மூதாட்டி இருந்திருக்கவில்லை என்றும் ஆயினும் மூதாட்டியின் உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன எனவும் ஏறாவூர் பிரிவுக் கிராம சேவையாளர் தெரிவித்தார்.

இச்சம்பவம் விபத்தா அல்லது சதி நாசகாரச்செயலா? என்பது தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (ப)

# கசிப்பு உற்பத்தி நிலையம் இளைஞர்களால் முற்றுகை

மட்டக்களப்பு,பெப்.08

முனைக்காடு மாதிரிப் பண்ணைக்குப் பின்னாலுள்ள ஆற்றங்கரையோர சதுப்பு நிலப் பிரதேசத்தில் இயங்கி வந்த சட்டவிரோதக் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நேற்று முனைக்காட்டு இளைஞர்கள் சுற்றி வளைத்தனர்.

இவர்களது சுற்றிவளைப்பின்போது கசிப்பு உற்பத்திக்குப் பயன்படும் பெருந்தொகையான பொருள்கள் கைப்பற்றப்பட்டு, கிராமசேவை உத்தியோகஸ்தர் மற்றும் பட்டிப்பளைப் பொலிஸார் வரவழைக்கப்பட்டு அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இங்கு இடம்பெறும் கசிப்பு உற்பத்திகாரர்கள் பொலிஸாருக்குப் பணம் வழங்குகின்றனர் எனவும் பொலிஸாரின் மறைமுக அனுமதியுடன் இச் சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன எனவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயங்கவை கொழும்பு கொண்டு வர முயற்சி: காப்பாற்ற முனையும் உக்ரேனிய அதிகாரிகள்!



கொழும்பு, பெப். 08
டுபாய் விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட, ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவரைத் தம்மிடம் கையளிக்குமாறு உக்ரேனிய அதிகாரிகள், அபுதாபி அதிகாரிகளிடம் கோரியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவுக்குச் செல்லும் வழியில் டுபாய் விமான நிலையத்தில் கடந்த 4ஆம் திகதி உதயங்க வீரதுங்க கைது செய்யப்பட்டார். சர்வதேச பொலிஸ் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அவர், டுபாய் விமான நிலையக் குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, அபுதாபி அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளார்.

இவரை இலங்கைக்குக் கொண்டு வருவதற்காக, ஏழு இலங்கை அதிகாரிகளைக் கொண்ட சிறப்புக்குழுவொன்று டுபாய்க்குப் பயணமாகவுள்ளது.

இந்தக் குழுவில் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் இருவர், குடிவரவுத் திணைக்கள அதிகாரி ஒருவர், குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இருவர், வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

இவர்கள் உதயங்க வீரதுங்கவை இலங்கைக்குக்கொண்டு வரும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

உதயங்கவீரதுங்கவை கூடிய விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அபுதாபி அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனச்சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல இரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தற்போது அபுதாபியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உதயங்க வீரதுங்கவைத் தமது நாட்டுக்கு அனுப்பிவைக்குமாறு உக்ரேனிய அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உதயங்க வீததுங்க தமது நாட்டுக் குடியுரிமை பெற்றவர் என்ற வகையில் அவரைத் தமது நாட்டுக்கு அனுப்புமாறு உக்ரேனிய அதிகாரிகள் கோரியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

(க)

## தொழில்நுட்ப கல்லூரியை ஆரம்பிக்க நடவடிக்கை!


அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, பெப். 08
தொழில்நுட்பக்கல்வியைப்பெற்றுக் கொடுத்து அதிகளவிலான தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க எதிர் பார்த்துள்ளோம்என உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இந்நாட்டின் இளைஞர் யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்குத்தீர்வைப்பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூரிய ஆயுதத்தினால் தாக்கி இரு பெண்கள் படுகொலை!

கொழும்பு, பெப். 08
காலி, பொத்தல பிரதேசத்தில் இரண்டு பெண்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கூர்மையான ஆயுதம் ஒன்றினால் தாக்குதல் மேற்கொண்டு, மகள் மற்றும் தாய் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அவர்களின் வீட்டில் நடைபெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் 46 மற்றும் 25 வயதுடைய பெண்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது.

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மகளின் கணவரால் இந்தக் கொலைகள் செய்யப்பட்டுள்ளது எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளன.

கொலைகளைச் செய்த சந்தேக நபர் அந்தப் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ள நிலையில் பொத்தல பொலிஸாரால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மீதொட்டமுல்ல குப்பை மேடு தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு இறுதி அறிக்கை!

கொழும்பு, பெப். 08
கொலன்னாவ – மீதொட்ட முல்ல பிரதேசத்தில் குப்பை மேடு சரிந்தமையால், ஏற்பட்ட சேதங்கள் பற்றி விசாரணை நடத்திய ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சந்ரதாஸ நாணயக்கார ஜனாதிபதியிடம் அறிக்கையை சமர்ப்பித்தார்.

குப்பை மேட்டை அகற்றுவதற்கான குறுங்கால – நீண்ட காலப் பரிந்துரைகளும் முன்மொழியப்பட்டுள்ளன.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டை அகற்றுவதற்காக 2015 ஆம், 2016ஆம் ஆண்டு காலப் பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கூடுதலான நிதி வழங்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு கொழும்பு மாநகரசபை இதற்கென 64 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு இந்தத் தொகை 182 வரை அதிகரித்ததோடு, 2016ஆம் ஆண்டில் 232 மில்லியன் ரூபா வரை அதிகரித்திருக்கிறது என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.



கொழும்பு மாநகரசபை கழிவகற்றுவதற்கான முறையான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்பதும், தீர்வு வழங்குவதற்கான யோசனைகளை முறையாக நடைமுறைப்படுத்தாமையுமே விபத்துக்கான காரணம் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐ.தே.சு.முன்னணியின் எட்டு வேட்பாளர்கள் தமிழ் முற்போக்கு கூட்டணியுடன் இணைவு!



அம்பகமுவ பிரதேச சபையின் கீழ் போட்டியிட்ட ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் வாழைப்பழச் சீப்பில் போட்டியிடும் எட்டு வேட்பாளர்கள் நேற்றுமுன்தினம் தமிழ் முற்போக்கு கூட்டணியோடு இணைந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் கினிகத்தேன திலகாஸ் மண்டபத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிடுகின்ற தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை இந்த எட்டு வேட்பாளர்களும் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது அமைச்சர்களான பழனி திகாம்பரம், கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்னண் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு மேலும் பல அபிவிருத்தித்திட்டங்களை முன்னேடுக்கும் நோக்கிலே மலை நாட்டு புதியகிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தோடு இணைந்து மேலும்பல அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம் என ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் வாழைப் பழ சீப்பில் போட்டியிடும் எட்டு வேட்பாளர்கள் நேற்றுமுன்தினம் தமிழ் முற்போக்குக் கூட்டணியோடு இணைந்து கொண்டபோதே இதனை குறிப்பிட்டனர்.

## தேங்காய்களை திருடிய இளைஞர்கள் கைது!

கொழும்பு, பெப். 08
தேங்காய்களைத் திருடிய ஐந்து இளைஞர்கள் மராவில பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மராவில லன்சிகம பிரதேசத்தில் உள்ள தோங்காய்த் தோட்டம் ஒன்றில் நுழைந்து 200 தேங்காய்களை திருடியதுடன் அதில் ஒரு தொகுதி தேங்காய்களை முச்சக்கர வண்டியில் எடுத்து செல்ல முற்பட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 25 முதல் 30 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என தெரியவந்துள்ளது.

சந்தையில் தேங்காய் விலை அதிகரிப்பால் இந்தப் பகுதியில் தேங்காய்த் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இல்ல மெய்வன்மைப் போட்டி

கோப்பாய்,பெப்.08

யாழ். கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சு.விவேகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரும் பழைய மாணவியுமான இ.பிரியதர்சினியும் சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ உதவியாளரும் பழைய மாணவனுமான பா.வித்தியானந்தும் கௌரவ விருந்தினர்களாக புலம் பெயர் நாட்டைச் சேர்ந்த பழைய மாணவர்களான உ.ஆனந்தகுமார், உ.உதயரூபி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# அரச வங்கிகளில் மக்கள் பணம் மைத்திரி – ரணில் அரசால் சூறை!

## மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,பெப்,08

அரச வங்கிகளில் உள்ள பொதுமக்களின் பணத்தை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையிடம் இருந்து பாதுகாக்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது ஆட்சிக்காலத்தில் எந்தவோர் அரச வங்கி ஊழியரும் வீதியில் இறங்கிப் போராடவில்லை என்று தெரிவித்த அவர், இன்று நல்லாட்சி அரசுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்கள் வெடித்திருக்கின்றன என கூறினார்.

கொழும்பு இராஜகிரியவில் உள்ள தனது தொடர்பாடல் அலுவலகத்தில் கூடியிருந்த ஊடகவியலாளர் மத்தியில் நேற்றுமுன்தினம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ் வாறு கூறினார்.

மத்திய வங்கி பிணை முறிமோசடி தொடர்பான விசாரணை அறிக்கை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதிலும், அதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கலந்து கொள்ளவில்லை.

இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் இதன்போது வினவினர்.

இதற்குப் பதிலளித்த மஹிந்த நான் இன்று (நேற்றுமுன்தினம்) காலை நாடாளுமன்றத்துக்குச் செல்வதற்கு முன்னர் எமது குழு கூடியது. கந்தளாய்ப் பகுதிக்கு நான் இன்றைய தினம் செல்ல விருப்பதாலும், மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி விவகார விவாதம் மூன்று நாள்களுக்கு நடப்பதாலும் அந்த விவாதத்தில் கலந்து கொள்வதிலிருந்து தவிர்த்துக்கொள்ள முடிவெடுத்துள்ளேன்.

இந்த விவாதம் ஒரு தினமே இடம்பெறும் என்று நினைத்திருந்தோம். ஒரே தினத்தில் விவாதம் முற்றுப் பெறுமாக இருந்தால் இன்றைய தினமே( நேற்றுமுன்தினம்) நானும் சென்று கலந்துகொண்டு உரையாற்றியிருப்பேன். எனினும் மூன்று நாள் விவாதம் என்பதால் இறுதிநாளில் உரையாற்றுவதற்கு நான் தீர்மானித்துள்ளேன்.

அரச வங்கிகளில் சிறிது சிறிதாகச் சேமித்து வரும் மக்களின் பணத்தைப் பாதுகாப்பதற்காக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அவர்கள் தலைமையிலான அமைச்சரவையிலிருந்து வங்கிகளைக் காப்பாற்ற வேண்டும்.

எனது ஆட்சிக்காலத்தில் அரச வங்கிகளைத் தனியார் மயப்படுத்தலில் இருந்து தடுத்தேன். ஆனால் இன்று அரச வங்கிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வங்கிகளின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் செய்துவருகின்றனர்- என்றார்.

# தினசரி ராசி பலன் (08.02.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 26ஆம் நாள் வியாழக்கிழமை அஷ்டமித்திதி பகல் 10.13மணி வரை பின்னர் நவமி. நட்சத்திரம் விசாகம் பகல் 2.19 மணி வரை பின்னர் அனுஷம். மரணயோகம் பகல் 10.13 வரை. பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 1.52 மணி முதல் 3.20 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 8.01 மணி முதல் 9.31 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *தைமாத தேய்பிறை நவமி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *விசாகம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். வீண் அலைச்சல்களும், செலவுகளும் உண்டாகும். தொழிலாளர்கள் ஓரளவு முன்னேற்றத்தைக் காண்பார்கள்.

**ரிஷபம்** மகிழ்ச்சியான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். கொடுக்கல், வாங்கல் சிறப்பாக அமையும். பிரிந்த உறவுகள் மீண்டும் இணைவர். திருமண முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** சுபீட்சமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சியால் சுபீட்சம் உண்டாகும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள்நடக்க வாய்ப்புள்ளது. ஆடை, ஆபரணப் பொருள்கள் வந்து சேரும்.

**கடகம்** சஞ்சலமான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் காணப்படும். உத்தியோகத்தர்கள் கவனமாகப் பணி புரிவது அவசியம். உடல் நலனில் கவனம் தேவை.

**சிம்மம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். எதிர்பார்த்த காரியம் தாமதமாகும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**கன்னி** நன்மையான நாள். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரத் தொழில் முன்னேற்றம் அடையும். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக இருக்கும்.

**துலாம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். சிலருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**விருச்சிகம்** தீமையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் சச்சரவு உண்டாகும். உடல் நோய் வாய்ப்படும். மருந்துச் செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் பல இடையூறுகள், பிரச்சினைகள் உண்டாகும்.

**தனுசு** உயர்வான நாள் பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு தொழில் நுட்ப அனுபவங்கள் கிட்டும்.

**மகரம்** விருத்தியான நாள். பொருளாதாரம் மேம்படும். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். குடும்ப வாழ்க்கை சிறப்புடையதாக இருக்கும். நீண்ட காலமாகப் பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேருவர்.

**கும்பம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வீடு, வாகன யோகம் அமையும். அரச வழிச் சலுகைகள் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க உத்தியோகம் தேடிவரும்.

**மீனம்** சலனம் மிகுந்த நாள். தனவரவு குறையும். வேலைப்பளு அதிகரிக்கும் தொழிலில் வெறுப்பு உண்டாகும். மாணவர்களுக்குக் கல்வியில் கவனம் எடுக்க வேண்டும். உறவினர்களின் தொல்லைகள் உண்டாகும்.

**சந்திராட்டமநாள்:பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி, அசுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# யாழ். பொலிஸ் நிலையத்தில் கைதி தற்கொலைக்கு முயற்சி

யாழ்ப்பாணம், பெப் .08

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருந்த குடும்பத்தலைவர் ஒருவர் கழுத்தில் பிளேட்டால் கீறித் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவம் ஒன்று கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கணவர் மதுபோதையில் வந்து தன்னைத் தாக்குகிறார் எனக் குடும்பத் தலைவரின் மனைவி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இதனடிப்படையில் குடும்பத்தலைவர் கடந்த தினங்கள் இரவு கைது செய்யப்பட்டார்.

வாக்குமூலம் பெற்ற பின்னர் அவர் பொலிஸ் நிலையக் கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் சட்டைப்பைக்குள் மறைத்து வைத்திருந்த பிளேட்டால் தனது கழுத்தில் அவர் கீறியுள்ளார்.

குடும்பத் தலைவரின் செயலைக் கூண்டில் தடுத்துவைக்கப்பட்டிருந்த வேறு சந்தேகநபர்கள் அவதானித்து அபாயக்குரல் எழுப்பினர்.

உடனடியாகக் குடும்பத் தலைவரின் தற்கொலை முயற்சியைத் தடுத்த பொலிஸ் உத்தியோகத்தர்கள், அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அவருக்கு கழுத்தில் ஏற்பட்ட காயத்துக்கு வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்படுகின்றது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தார். (ஐ)

# வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

*அரியாலை,பெப்.08*

*அரியாலைசனசமூக நிலையம் சர்வதேச மகளிர்தினத்தை முன்னிட்டு நடத்தும் திருமதி நேதாஜி தேன்மொழி அவர்களின் அனுசரணையில் யாழ். மாவட்ட ரீதியிலான மாபெரும் வலைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டி ஒன்றை எதிர்வரும் 25, 26 ஆகிய திகதிகளில் நடத்தவுள்ளது.*

*அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ள இப் போட்டியில் பெறுமதி மிக்க பணப் பரிசில்களும் வழங்கப்படும்.*

# விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.08

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது என உதவிப் பதிவாளர் திருமதி வி.சிவகௌரி அறிவித்துள்ளார். மாணவர்கள் மற்றும் பெற்றோர்களது வேண்டுகோளுக்கிணங்க இவ் விண்ணப்ப முடிவு திகதி 09.02.2018 இல் இருந்து 19.02.2018 ஆக நீடிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# காலம் இதழின் அறிமுக அரங்கு இன்று

யாழ்ப்பாணம், பெப்.08

கனடாவிலிருந்து வெளிவரும் 'காலம் சிற்றிதழின் 51 ஆவது இதழ் குழந்தை ம.சண்முகலிங்கம் சிறப்பிதழாக வந்துள்ளது, அதன் அறிமுக அரங்கும் 'காலம்' ஆசிரியர் செல்வத்துடனான சந்திப்பும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல.121, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள சிந்தனைக் கூடக் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த அரங்கில் தமிழ் முதுநிலை விரிவுரையாளர் க.அருந்தாகரன், தி.செல்வமனோகரன், ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் உரையாற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.சிவசேகரம்

# தோழர் சண்முகதாசன் எமக்காக விட்டுச் சென்றவை...

தோழர் என்.சண்முகதாசன் மறைவுக்குப் பிறகு இன்றுடன் சரியாக 25 வருடங்கள் கடந்துவிட்டன. அவர் இலங்கை இடதுசாரி இயக்கத்துக்கு பல முனைகளிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் தொண்டாற்றியவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேரத் தொண்டராகி அவர் தொடங்கிய மும்முரமான அரசியல் , வாழ்க்கைப் பயணத்தின் முடிவுவரை கொள்கையை விட்டுக்கொடுக்காத பெருமைக் குரியவராக அவரை பிரகாசமாக வரலாற்றில் அடையாளப்படுத்தி நிற்கிறது. தான் பொறுப்பேற்ற பணி எதுவாயினும் அதனை முழுமையான ஈடுபாட்டுடன் அதன் முடிவு வரையும் கொண்டு செல்லும் மனவுறுதி காரணமாகவே அவர் நமது நாட்டின் அரசியல் வரலாற்றில் இடதுசாரி இயக்கத்தின் மிக நேர்மையான ஒரு தலைவராகவும் வர்க்க சமரசத்துக்கு இடம் கொடுக்காத ஒரு போராளியாகவும் தனக்கெனத் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளார்.

லங்கா சமசமாஜக் கட்சியின் ட்ரொட்ஸ்கியவாதத்துக்கு எதிராகதத் துவார்த்த தளத்தில் தோழர் சண்முகதாசன் ஆற்றிய பங்கு பெரியது. அது போன்றே ஜோசப் ஸ்டாலினை நிராகரித்து திரிபுவாதப்பாதை முன்னெடுக்கப்பட்டபோது அந்தத் துரோகத்தை முழுமூச்சுடன் எதிர்த்தவர்களுள் அவர் முக்கியமானவர். சோவியத் யூனியனில் குருசேவ் தலைமை மார்க்சிய லெனினிசத்துக்கும் மக்கள் புரட்சிப் பாதைக்கும் ஆப்புவைக்க எடுத்த முயற்சிகளை மறு கேள்வி இல்லாது நமது நாட்டின் கம்யூனிஸ்ட் தலைவர்கள் எனப்பட்ட திரிபுவாதிகள் ஏற்றதன் தொடர் விளைவாக , இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குள் 1963 ஆம் ஆண்டில் பிளவு ஏற்பட்டது. அப்போது மார்க்சிய லெனினி சத்தினதும் புரட்சிகரப் பாதையினதும் முதன்மைப் போராளியாகவும் தத்து வார்த்த வழிகாட்டியாகவும் சண்முகதாசன் நின்று போராடியமை மார்க்சிய லெனினிசவாதிகளைக்கொண்ட கட்சிப்பிரிவு திரிபுவாதிகளுக்கும் அவர்களது சந்தர்ப்பவாதக் கூட்டாளிகளுக்கும் ஈடு கொடுத்து நிற்க உரமூட்டியது.



1963 ஆம் ஆண்டளவில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் உலகளாவிய முறையில் ஏற்பட்ட பிளவின்போது இந்தியாவில் ஏற்பட்ட பிளவைப்போலன்றி, இலங்கையில் ஏற்பட்ட பிளவு அரசியற் தெளிவுமிக்க தொன்றாக நிகழ்ந்தது. அதன் விளைவாகவே தெற்காசியாவில் மார்க்சிய லெனினிச சிந்தனைக்கும் போராட்டப் பாதைக்கும் ஆதாரமாக நின்ற அதிமுக்கியமான சக்தியாக இலங்கையின் மார்க்சிய லெனினிசக் கட்சி தன்னை அடையாளப்படுத்த முடிந்தது. இதில் தோழர் சண்முகதாசனின் அரசியல், தொழிற்சங்க மற்றும் தத்துவார்த்த பிரசாரப் பணிகளின் பங்கு மகத்தானது.

இந்தியாவின் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவின் உண்மையான அரசியல் தன்மையை தோழர் சண்முகதாசன் தெளிவாகவே விளங்கியிருந்தார். பிரிவுண்ட இரு பகுதியினரதும் தலைமைகள் திரிபுவாதத் தன்மை கொண்டவையாக இருந்தமையையும் அங்கு தத்துவார்த்த மட்டத்தில் ஆழமான விவாதமொன்று நடவாததையும் பற்றி 1970 ஆம் ஆண்டில் அவரைச் சந்தித்தபோது அவர் எனக்கு விளக்கிக் கூறியதோடு, நக்சல்பாரி போராட் டத்தையொட்டி வளர்ச்சி பெற்ற காரணத் தால் நக்சலைட்டுக்கள் என்று அழைக்கப்பட்ட இந்திய மார்க்சிய லெனினிசவாதிகள் 1969 ஆம் ஆண்டளவில் சீனாவின் தலைவர் எமது தலைவர் என்று எழுப்பிய கோஷம் அவர்களைப் பல வீனப்படுத்தும் என்று அன்று அவர் அவர்களை எச்சரித்தது பற்றியும் என்னிடம் குறிப்பிட்டார். அந்தத்தவறை அவர்கள் உணர்ந்து கொள்வதற்கு மேலும் ஓரிரு வருடங்கள் எடுத்தன.

மாஓ சேதுங் சிந்தனை என்றால் என்ன, சீனாவின் மகத்தான கலாசாரப் புரட்சியின் முக்கியத்துவம் என்ன என்பன பற்றிய சண்முகதாசனின் விளக்கங்களும் குறிப்பாக கலாசாரப் புரட்சி பற்றிய அவரது நூலும் 1970 களில் உலகின் மார்க்சிய லெனினிசக் கம்யூனிஸ்டுகளின் கவனத்தை மிகவும் ஈர்த்தவையாகும் .

தோழர் மாஓ சேதுங் இறந்த பின்பு சீனாவின் அரசியல் போக்குப் பற்றி சண்முகதாசன் விடுத்த எச்சரிக்கைகள், அடிப்படையில் சரியானவையும் தீர்க்க தரிசனமானவையுமாகும். தோழர் மாஓ சேதுங் இறப்பதற்கு முன்னரே சீரழிவின் விதைகள் தூவப்பட்டுவிட்டதை அவர் அறிந்திருந்தார்.

அது போன்றே 1966 ஆம் ஆண்டில் திரிபுவாதிகளும் சமசமாஜிகளும் டட்லி– செல்வா உடன்படிக்கையை எதிர்த்து கொழும்பில் நடத்தப்பட்ட ஊர்வலத்தில் போனதைப் பற்றி தோழர் சண்முகதாசன் முன்வைத்த கடுமையான விமர்சனமும் ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) என்பது எந்த வகையிலும் மார்க்சிய பண்பேற்ற ஒரு பேரினவாத சக்தி என்பதை 1970 ஆம் ஆண்டளவிலேயே அவர் அடையாளம் காட்டியதும் மார்க்சிய லெனினிசத்தில் அவரது சிந்தனையின் தெளிவையும் ஆழத்தையும் நமக்கு அடையாளம் காட்டுவன.

தமிழ்த் தேசியவாதத் தலைமைத்துவம் 1976 ஆம் ஆண்டில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த சந்தர்ப்பவாத நோக்கத்தை அம்பலப்படுத்துவதில் சண்முகதாசனினதும் மார்க்சிய லெனினிசவாதிகளினதும் பங்கு முக்கியமானது. அவருக்கும் அன்றைய உடுவில் தொகுதியின் தமிழரசு கட்சி எம்.பி.யான வி.தர்மலிங்கத்துக்கும் இடையில் சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடந்த விவாதத்தின் மூலம் தமிழரசுக்கட்சியினதும் அதன் மறுவடிவமான தமிழர் விடுதலை கூட்டணியினதும் அரசியல் வறுமை வெளியானது. இந்தத் தமிழ்த் தேசியவாதிகளின் துரோகத்தை தமிழ் மக்கள் முற்றாக உணர்ந்து கொள்வதற்கு மேலும் சில ஆண்டுகளாயின.

1983 ஆம் ஆண்டுக்குப் பிறகு பேரினவாத ஒடுக்குமுறையின் உக்கிரம் தமிழர் விடுதலைப் போராட்டத்தை அவசியமாக்கிய சூழலில் தோழர் சண்முகதாசன் அந்த விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை ஆதரிக்கத் தவறவில்லை. இதற்கும் தமிழ்த் தேசியவாதத்துக்குள் சங்கமமான சில இடதுசாரிகளின் தடுமாறல்களுக்கும் இடையில் மிகுந்த வேறுபாடு உண்டு என்பதை இங்கு வலியுறுத்த வேண்டும்.

தோழர் சண்முகதாசன் என்றென்றுமே ஒரு முழுமையான சர்வதேசியவாதி. அவர் தேசிய இனவிடுதலை பற்றி வைத்திருந்த கண்ணோட்டம் மனித சமத்துவம், ஒடுக்குமுறைக்கு எதிரான மக்கள் எழுச்சிகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு என்ற அடிப்படையிலேயே அமைந்ததாகும். எனவே சாதியத்துக்கு எதிரான போராட்டத்துக்கு அவரது பங்களிப்பை அறிந்த எவருக்கும் தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்துக்கு அவரது ஆதரவை விளங்கிக்கொள்வதில் சிரமம் இருக்காது.

தோழர் சண்முகதாசன் தவறுகளுக்கு அப்பாற்பட்டவரல்லர். எந்தவொரு தனிமனிதரும் போன்று அவரும் தவறுகளைச் செய்தவர்தான். சில தவறுகள் கட்சியினதும் மார்க்சிய லெனினிச இயக்கத்துக்கும் வளர்ச்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தவும் செய்தன. ஆனால், அவற்றின் சுமையை ஒரு தனிமனிதர் மீது ஏற்றமுடியாது. ஓர் இயக்கத்தின் தலைமைத் தோழர் செய்கின்ற தவறில் அவரது சக தலைமைத் தோழர்களுக்கும் பங்குண்டு. எனவே காலம் கடந்து செய்யப் படுகிற விமர்சனங்கள் யாவும் சுயவிமர்சனங்களாகவும் அமைய வேண்டும்.

மார்க்சிய லெனினிச இயக்கத்தினதும் 1963 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு வேகமாக வளர்ந்த சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினதும் சரிவுகளுக்கும் பிளவுகளுக்கும் அகக் காரணங்களும் புறக் காரணங்களும் உள்ளன. புறக் காரணங்களுள் பேரினவாதத்தினதும் அதையொட்டிக் குறுகிய தேசிய வாதத்தினதும் பங்கு முக்கியமானது. அதுவே இன்னமும் தென்னிலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் முடக்கத்துக்குக் காரணமாக இருக்கிறது. பேரினவாத சக்திகள் இன்று தெற்கின் அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதன் பின்னணியிலேயே தமிழ் மக்கள் மத்தியில் மார்க்சிய லெனினிசவாதிகள் தங்களை நிலை நிறுத்த வேண்டியிருக்கிறது. எனவே இடதுசாரிகள் முன்னுள்ள பணி பெரியது.






தோழர் சண்முகதாசனின் பங்களிப்புகளில் பயன்மிக்கனவும் பெரியனவுமான அவரது மார்க்சிய லெனினிசப் போராட்ட அரசியல் கொள்கையும் நடைமுறையும் மார்க்சிய லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனை பற்றிய வழிகாட்டலும் நமக்கு இன்று மிகவும் உதவக்கூடியன. சரியான தத்துவார்த்த வழிகாட்டல் இல்லாமல் ஒரு கட்சியாலோ, ஓர் இயக்கத்தாலோ ஓர் அடிதானும் முன்னோக்கி வைக்க முடியாது. ஒன்றுபடுத்தக்கூடிய சக்திகளை ஒன்றுபடுத் தவும் எதிரியாகிய ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளையும் அவர்களுக்கு உடந்தையான உள் நாட்டுப் பிற்போக்குச் சக்திகளையும் தனிமைப்படுத்தவும் வேண்டிய கடமை முதன்மையானது. இதையும் ஒரு சரியான தத்துவார்த்த வழிகாட்டலின் மூலமே முன்னெடுக்க முடியும்.

1960 களில் இருந்து தனது இறுதி நாள்கள்வரை தோழர் சண்முகதாசன் மார்க்சிய லெனினிசத்துக்கு வழங்கிய பங்களிப்பை முழுமையாகப் பயன்படுத்துவது அவருக்கு நாம் செலுத்தும் ஒரு நன்றிக்கடன் மாத்திரமல்ல, நமது மக்களுக்குச் செய்யக்கடமைப்பட்டுள்ள ஒரு முக்கியமான காரியமுமாகும்.

*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரிகேடியர் பிரியங்கவை இலங்கைக்குத் திருப்பி அழைக்க இரண்டு வார காலக்கெடு விதித்தது பிரித்தானிய அரசு?



கொழும்பு, பெப். 08

லண்டனில் புலம்பெயர் தமிழர்களை அச்சுறுத்திய இலங்கை இராணுவ அதிகாரியான பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை, இரண்டு வார காலத்துக்குள் திருப்பி அழைக்குமாறு பிரித்தானிய அரசு இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது என ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய அரச அதிகாரிகளை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தச்சம்பவம் தொடர்பாக, விசாரணைகளை ஆரம்பிக்குமாறு லண்டன் பெருநகர காவல் துறையிடமும், பிரித்தானிய அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

எனினும், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவிடம் லண்டன் பெருநகர காவல்துறை விசாரணைகளை மேற்கொள்வதற்கு, அவருக்குள்ள இராஜதந்திர விலக்குரிமை தடையாக இருக்கும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரிகேடியர் பிரியங்கவிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு முன்னதாக, அவருக்கு பிரித் தானியா அளித்துள்ள இராஜதந்திர விலக்குரிமையை நீக்க வேண்டியிருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவை பாதுகாப்பு ஆலோசகர் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்வதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# கிறீஸ் மனிதர் பயமுறுத்தல் கோட்டாவின் திருவிளையாடல்!

## அமைச்சர் தயா கமகே தெரிவிப்பு

கொழும்பு, பெப்.08

கிறீஸ் மனிதர் தாக்குதல் கோட்டாபய ராஜபக்ஷவின் திருவிளையாடல்என அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியின்போது கிறீஸ் மனிதன் உருவாக்கி சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுதினார்கள். கிறீஸ் மனிதனைப் பிடித்துப் பொலிஸில் கொடுத்தால் இராணுவத்தினர் வந்து அவர்கள் மனநோயாளிகள் எனக் கொண்டு சென்றார்கள். இது அனைத்துமே கோட்டாபய ரஜபக்ஷவின் திருவிளையாடல் என சிறு கைத்தொழில் அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உங்களது பிரதேசங்களில் பல கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கும் மக்கள் அதிகம் காணப்படுகிறார்கள்.

30 ஆண்டுகள் நீங்கள் மிகவும் துயரப்பட்டீர்கள். கடந்த கால ஆட்சியாளரான மஹிந்த ராஜபக்ஷ எம்மையும், எமது குழந்தைகளையும், பிறக்கவிருக்கும் குழந்தைகளையும் கடனாளியாக்கி விட்டுச் சென்றுள்ளார்.

அம்பாந்தோட்டை சூரியவெவ கிரிக்கெட் மைதானம், துறைமுகம், கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை அனைத்து இடங்களும் கடனுடன் தான் உள்ளன. இதிலே அரைவாசியை நாசம் செய்து மிகுதியை கொள்ளையடித்துள்ளார்கள். இவர்கள் கொள்ளையடித்த நிதியை நாங்களும் நீங்களும் இணைந்து வட்டியுடன் கட்ட வேண்டும்.

அரசுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்ற போது துப்பாகியால் சுட்டுக் கொலை செய்தார்கள். குடிதண்ணீருக்காக போராடிய மக்களை வெடி வைத்து துரத்துமாறு கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டார், பிரகீத் எக்னலிகொட காணாமற் செய்யப்பட்டார். ரக்பி வீரர் தாஜூதீன் கொலை செய்யப்பட்டார்.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை பயமூட்டு வதற்காக கிறீஸ் மனிதனை உருவாக்கினார்கள். கிறீஸ் மனிதனை பிடித்து பொலிஸில் கொடுத்தால் இராணுவத்தினர் வந்து அவர்கள் மனநோயாளிகள் எனக் கொண்டு செல்கிறார்கள். இது அனைத்துமே கோட்டாபாய ராஜபக்ஷவின் திருவிளையாடல். - என்றார்.

# பிணைமுறிக் கொடுக்கல் வாங்கலுக்கும் ரணிலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை!

## பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவிப்பு



கொழும்பு, பெப். 08

திறைசேரி முறிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கலுக்கும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று பிரதிஅமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

பிணைமுறி சர்ச்சை மற்றும் பெரும் ஊழல் மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கைகள் மீதான சபை ஒத்திவைப்பு விவாதம் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்த விவாதத்தில் உரையாற்றும்போதே பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற திறைசேரி முறிகள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். திறைசேரி முறிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கலுக்கும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பது ஆணைக்குழுவின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஊழலில் ஈடுபட்ட அனைவருக்கும் எதிராகவும் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

பிணைமுறி தொடர்பில் அமைச்சர்களான கபீர் ஹாசிம். மலிக் சமரவிக்ரம போன்றோர் மத்திய வங்கியில் இரகசியக் கூட்டம் நடத்தினர் எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டையும் ஆணைக்குழு மறுத்துள்ளது. இந்த ஆணைக்குழு நியமித்தது தொடர்பில் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையை ரத்துச்செய்தது போன்று மஹிந்த ராஜபக்ஷவின் குடியுரிமையை நாம் பறிக்கப் போவதில்லை. அவர் மோசடியில் பங்களித்திருப்பதற்கான போதிய சாட்சியம் இருப்பதால் மோசடி விசாரணை நடத்தி தண்டனை வழங்கப்படும்.

2008 - -2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிணை முறி தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி ஆணைக் குழு பரிந்துரைசெய்யவில்லை என உதய கம்மன்பில குற்றஞ் சாட்டினார்.

அறிக்கையின் 447 ஆவது பக்கத்தில் 2008-2015 காலப் பகுதியில் முறைகேடான கொடுக்கல் வாங்கல் நடந்திருப்பதும் அது தொடர்பில் விசாரணை நடத்துமாறும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருட்டு 2015 வரை நடந்தது. அதற்குப் பின்னரும் நடந்தது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்றார்.

# காசல்ரீ நீர்த் தேக்கத்திற்கு அருகில் இறந்த சிறுத்தையின் உடல் மீட்பு!

கொழும்பு, பெப். 08

ஹற்றன் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட காசல்ரீ நீர்த் தேக்கத்திற்குஅருகில்லெதன்டி தோட்ட பகுதியில் இறந்த நிலையில் சிறுத்தையின் உடலம் ஒன்றுஇனங்காணப்பட்டுள்ளது என ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 09.30 மணி அளவில் இடம் பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது . இந்த லெதன்டி தோட்டமக்களால் ஹற்றன் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் இந்தச் சிறுத்தையை மீட்டனர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

உடலமாக மீட்கபட்ட சிறுத்தைக்கு கழுத்து பகுதியில் காயங்கள் காணப்படுகின்றன என்றும் இது தொடர்பாக வனவிலங்குகாரியாலய அதிகாரிகளுக்கு அறிவிக்கபட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம்தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 89

# உன்னைச் சரணடைந்தேன்


தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்.
கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர்.
அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது.
'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



## கோட்டத்தின் மேல் மாடி திறப்பு விழாவும், இசை நிகழ்ச்சிகளும்

### ஆதீன ஊர்வலம்

இக்காலத்தில் எங்களை எதிர்த்தவர்கள் பலர், தமக்குள் ஒன்று சேரத் தொடங்கியிருந்தனர். மகாராணி சோமசுந்தரம், பொன்.சுந்தரலிங்கம் ஆகியோர் ஒன்றிணைந்து, நல்லை ஆதீனத்திற்குப் பணம் சேர்த்து அதை ஆதீன முதல்வரிடம் வழங்குவதற்காக, ஒரு விழாவை ஒழுங்கு செய்தனர். அப்போது தான் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த திருமதி மனோன்மணி சண்முகதாஸையும், அவர்கள் தம் வயப்படுத்தியிருந்தனர். பெரியளவிலான ஓர் ஊர்வலத்தினை ஒழுங்கு செய்து, அவ்வூர்வலத்தில் நல்லை ஆதீனத்தை அழைத்துச் சென்று , இளம் கலைஞர் மன்றத்தில் வைத்து சேர்த்த பணத்தை நல்லை ஆதீன முதல்வரிடம் வழங்க ஒழுங்கு செய்தனர்.



அவ்வூர்வலம் எங்கள் கம்பன் கோட்டம் வழியாகத் தான் செல்வதாக இருந்தது. அந்த வீதியிலுள்ள எல்லா வீட்டுக்காரரையும் நேரில் சந்தித்து, கும்பம் வைத்து ஆதீனத்திற்கு மரியாதை செய்யும்படி கேட்டுக்கொண்ட மேற்படி குழுவினர், எங்களுக்கு விழாவிற்கான அழைப்பைத் தானும் தரவில்லை. அந்தணர்கள், நாதஸ்வர வித்துவான்கள், பேராசிரியர்கள், சமூகப் பிரமுகர்கள் எனப் பலரையும் கூட்டி அவ்வூர்வலம் நடத்தப்பட்டது. எங்களுக்குச் சொல்லாததால் என்ன செய்வதென்று குழம்பினோம். முடிவில் ஊர்வலத்தில் வரும் ஆதீன முதல்வருக்கு கம்பன் கோட்ட வாசலில், கும்பம் வைத்து, கால் கழுவி மரியாதை செய்வது என்றும், விழாவில் கலந்துகொள்வதில்லை என்றும் நாங்கள் முடிவு செய்தோம். ஊர்வலம் தொடங்கி வந்து கொண்டிருந்தது. எங்களுக்கு எதிரானவர்களால் இவ்வூர்வலம் நடத்தப்படுவது தெரிந்து, ஊர்வலத்தில் வந்த பலரும் சங்கடப்பட்டனர். கம்பன் கோட்ட வாசலுக்கு ஊர்வலம் வந்த பொழுது, திருநந்தகுமார் குருமுதல்வரின் பாதங்களைக் கழுவினான். அந்த நேரம் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. இறந்த போராளி ஒருவனுடைய உடலைத் தாங்கிய இயக்கத்தின் வாகனம் ஒன்று எதிர்த்திசையில் வந்தது. உடனே, மேளம், நாதஸ்வரம் எல்லாம் நிறுத்தப்பட்டன. ஊர்வலத்தில் இருந்த யாரோ ஒருவர் 'பிரேதம் வருகிறது, சுவாமி அதில் முழிப்பது நல்லதல்ல. எல்லோரும் உள்ளே செல்லுங்கள்' என்று சத்தமாய்ச் சொல்ல, ஆதீன முதல்வரும் உடன் வந்த அத்தனை பேரும், எங்கள் கம்பன் கோட்டத்திற்குள் வரவேண்டியதாயிற்று. உள்ளூர எங்களுக்குச் சந்தோசம். இவர்களுக்கு எதிராய் முருகன் எங்களை அங்கீகரித்ததாய் நினைத்தோம். சில நிமிடங்களின் பின் எங்கள் கோட்டத் திலிருந்து பழைய படி ஊர்வலம் தொடங்கிற்று. அன்றைய கூட்டத்தில் திருமதி சண்முகதாஸ் கம்பன் கோட்டத்தைக் கண்டித்துப் பேச,அச் செய்தி அறிந்து கடுங்கோபம் கொண்ட நான், திருமுருகனின் மோட்டார் சைக்கிளில் அன்றிரவே, அவர்களின் வீட்டிற்குச் சென்று, அவர்களுடன் கடுமையாய்த் தர்க்கப்பட்டேன். சண்முகதாஸை நேரடியாக நான் எதிர்த்துப் பேசியது அன்று தான். மூத்தவர்களான அவர்களைக் கடுமையாகப் பேசியதால் மனம் கவலைப்பட்டது. ஒரு காலத்தில் எங்களை அன்பாய் ஆதரித்தவர்கள். அவர்களை நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது என நினைந்து, அடுத்த நாள் பிரசங்கத்திற்குச்செல்லும் போது, அவர்கள் வீடு சென்று, கால் தொட்டு மன்னிப்புக் கோரினேன்.

★ ★ ★

### புதுவையின் கவிதை - பேச்சை நிறுத்தினேன்

இச் சூழ்நிலையில் தான் முதல் முதலாய், எங்கள் மேலான புலிகளின் மறைமுகமான கண்டனம் ஒன்று, பத்திரிகையில் வெளிவந்தது. நேராகக் கம்பன் கழகத்தைச் சாடாவிடினும், ஆலயங்களில் நாங்கள் செய்துவந்த பட்டிமண்டபங்களை, மறைமுகமாகக் கிண்டல் செய்து புதுவை எழுதிய ஒரு கவிதையை, புலிகளின் அதிகார பூர்வ பத்திரிகையான 'ஈழமுரசு' வெளியிட்டிருந்தது. புலிகளின் சார்பில் நேரடியாக முதல் முதலில், எங்கள் மேல் தொடுக்கப்பட்ட அம்பு அது.

★ ★ ★

### புதுவைக்கும் எனக்குமான நெருக்கம்

புதுவை எங்களை சகோதரர்களாய் நேசித்தவர். அவரது மனைவியார் மிக மென்மையானவர். அவர்களது மூத்த மகனுக்கு சோபிதன் என, நான்தான் பெயரிட்டேன். இயக்கத்தோடு நாம் முரண்பட்டிருந்த போதும் எங்களின் மீதான அன்பையும், மதிப்பையும் புதுவை குறைக்கவில்லை. இவர் இயக்கத்தில் இருந்த போது, இவருக்குத் தெரியாமல் இவரது ஒரே மகள் இயக்கத்தில் சேர்ந்தாள். அப்போது என்னைத் தேடி வந்த இவர், மனம் வருந்தி தனது துக்கத்தைக் கொட்டினார். இடையில் ஒரு நாள் மகள் வீட்டிற்கு வந்த போது கம்பன் கோட்டத்திற்கு ஓடி வந்து, என்னை அழைத்துச் சென்று இயக்கத்தை விட்டு விலத்திவிடும்படி, மகளுக்குப் புத்திமதி சொல்லச் சொன்னார். நான் புத்தி சொல்லியும் கேட்காமல் அவள் சென்று விட, மனம் வருந்தி அன்றிரவு நெடுநேரம் எங்களோடு பல விடயங்களையும் மனம் விட்டுப் பேசினார். அவற்றை இங்கு எழுத முடியாது. யாழை விட்டு எல்லோரும் புறப்படுகிற பொழுது, என்னைத் தேடி வந்து, 'நீங்கள் இங்கு நிற்க வேண்டாம் வெளிக்கிடுங்கோ' என்று புத்தி சொல்லிப் போனார். பிறகு நான் கொழும்பு வந்துவிட்டேன். பின்னர் போர் நிறுத்தம் ஏற்பட்ட போது, கொழும்புக்கு என்னைத் தேடி வந்து சந்தித்தார். நடந்தவற்றிற்காய் மன்னிப்புக் கோரினார். மீண்டும் போர் தொடங்கி நடந்து கொண்டிருந்த காலத்தில், மல்லிகை அட்டைப் படத்திற்காக அவரைப் பற்றிக் கட்டுரை எழுதினேன். அக் கட்டுரையைப் படித்து விட்டு வன்னியிலிருந்து, தொலைபேசியில் நெக்குருகிப் பேசினார். இன்று அவர் எங்கிருக்கிறார் என்று தெரியாத நிலை. அவர் மீதான அன்பு ஒரு துளியும் குறையவில்லை. அவர் மீண்டும் வர வேண்டும் எனப் பிரார்த்தித்தபடி இருக்கிறேன்.

★ ★ ★

### புதுவையுடன் சண்டை பிடித்தேன்

இத்துணை நெருக்கமான புதுவை எங்களைக் கிண்டல் அடித்து எழுதிய, கவிதையைக் கண்டதும் நான் கடுங்கோபம் கொண்டேன். காரணம் புதுவையிடம் பலதரமாக, இயக்கம் எங்களோடு ஏன் முரண்படுகிறது என்று கேட்டிருக்கிறேன். அதற்கு அவர் அத்தகைய முரண்பாடு ஏதும் இல்லை என்று, சத்தியம் பண்ணாத குறையாகப் பதில் சொல்வார். இப்போது இவரே எங்களை கிண்டல் பண்ணிக்கவிதை எழுதியதும், ஆத்திரப்பட்ட நான் நேராகக் கம்பன் கோட்டத்திற்கு அருகில் இருந்த, அவரது வீட்டிற்கு நேரடியாகச் சென்றேன். அது ஒரு விடியற் காலை நேரம், என்னைக் கண்டதும் புதுவை மிகச் சங்கடப்பட்டார். 'உங்களுக்கு எங்களோடு என்ன பிரச்சினை? ஏன் இப்படி எழுதினீங்கள்' என்று நேரடியாய்க் கேட்டேன். நான் அப்படி நேராய் வந்து கேட்பேன் என புதுவை எதிர்பார்க்கவில்லை. 'ஜெயா இது உங்களைப் பற்றி எழுதின கவிதையில்ல, வேற பட்டிமண்டபக் குழுக்களைப் பற்றி எழுதின கவிதை' என்று சமாளித்தார். நான் அதை ஒத்துக் கொள்ளாமல் சத்தம் போட்டேன். அப்போது ஆகாயத்தில் பொம்மர் சுற்றத் தொடங்க, 'ஜெயா நீங்கள் இங்க நிற்கிறது ஆபத்து, உடன கோட்டத்திற்குப் போங்கோ'' என்று சொல்லி என்னை அனுப்பிவைத்தார். அவரின் சங்கடத்தைப் புரிந்து கொண்டு நானும் திரும்பினேன்.

★ ★ ★

### கூடி ஆராய்ந்தோம்

கவிதையைப் பார்த்து விட்டு திருநந்தகுமாரும் கழகத்திற்கு வந்தான். திருநந்தகுமார், குமாரதாஸ், நான், ரத்தினகுமார் ஆகியோரும் அது பற்றி உடனடியாகக் கூடி ஆலோசித்தோம். மறைமுகமாகக் காட்டி வந்த எதிர்ப்பை, முதல் முதலாகப் புலிகள் வெளிப்படக் காட்டத் தொடங்கியிருக்கின்றனர். இனி அவர்கள் எந்த எல்லைக்கும் செல்லலாம். ஆகவே அவர்களை நாம் முந்திக் கொள்ளவேண்டும் என, ஓர் அவசர முடிவினை எடுத்தோம். 'கழகம் மதிக்கப்படும் வரை, இனி நாம் யாழ்ப்பாணத்தில் பேசுவதில்லை' என்பதுவே அம்முடிவு.

### வெட்டிரும்புச் சுப்பர் விழாவில் இன்று பட்டிமன்றம்

'கொத்திவயல் அம்மன்' கொடியேறி
இன்று பத்தாம் திருவிழா.
பகலிரவு இருபொழுதும்
'வெட்டிரும்புச் சுப்பர்' விழா உபயம்.
இரவுக்கு
பட்டிமன்றம் என்று பத்திரிகை
விளம்பரம்.
'நரை விழுந்தால் இருவரில் யாரழகு?
திரைகடலைத் தாண்டிய சீதையா
அல்லது
கரையாத கற்புடையாள் கண்ணகியா?"
இது தலைப்பு.
'நாவரசர் நல்லதம்பி' நடுவர்.
ஒரு பக்கம்
'காப்பியத்திலகம் கனகசபை'
தலைமையிலும்
மறுபக்கம்
வாக்கிய கலாநிதி வடிவேலர்
தலைமையிலும் பேசிடுவர்.
சீதையணிக்கு மூன்று பேர் வாதிடுவர்.
கண்ணகிக்காய் வாதிடவும் மூவர்
வருகின்றார்.
பிறகென்ன 'அறிவுத் திலகங்கள்'
அனல் மூட்ட
செந்தமிழ்த் தீ
பொறிபறந்து அந்தப் புழுதி வயல்
தீப்பிடிக்கும்.
சீதைக்கு என்ன நிறச்சேலை
அழகென்றும் வாதிடுவர்.
கண்ணகியின் காற்சிலம்பு செய்த
கடைப் பேரதையும் சொல்லிப்
பேசிடுவர்.
பகிடியெலாம்
விடுவார் நடுவர்.
விடியும் வரை கேட்டாலும்
அலுக்காது.
அப்படியோர் 'அறிவுக் கடல்' அமிர்தம்.
வசந்த மண்டபத்து வாசலிலே
'வடிவழகி'
இருந்த படி கேட்டு இன்புறுவாள்.
வீதியெல்லாம்
குவிந்து ஊர்ச் சனங்கள் குதுகலிப்பர்.
செந்தில்–கவுண்டமணி திரைப்படத்தைப்
போலயிது.
சந்தோசமான சமாச்சாரம்.
இம் மண்ணில்
போர் நடந்தாலென்ன?
'புலி' இறந்தால் நமக்கென்ன?
வேரறுந்தாலென்ன?
வீடிழந்து மக்களெல்லாம்
ஆவிகலங்கி அலைந்தாலும்
நமக்கென்ன?
காவியமே பெரிது,
கண்ணகியே கற்பரசி,
சீதையவள் தானே திருச்செல்வி
மேடையிலே வாதிடலே எமக்குரிய
வரலாற்றுக் கடமை ஆதலினால்
கட்டாயம் பட்டிமன்றம் காணல்
புண்ணியமாம்.
எட்டு மணிக்கே எழுந்தருள்வீர்
ஜெகத்தீரே!

### ஒதுங்கிக் கொண்ட திருமுருகனும் தமிழருவியும்

ஒற்றுமையாய் அம்முடிவு எடுக்கப்பட்டால் தான், சமுதாயத்தில் அது பாதிப்பை ஏற்படுத்தும் என நினைந்து, தமிழருவி சிவகுமாரனோடும், ஆறு.திருமுருகனோடும் அதைப் பற்றிப் பேச கார் பிடித்துச் சென்றோம். சிவகுமாரன் அம்முடிவைக் கேட்டு மகிழ்ந்து எம்முடன் இணைய உடன் சம்மதித்தான். அங்கிருந்து திருமுருகனைச் சந்திக்க ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குச் சென்றோம். எங்களைக் கண்டதும் திருமுருகன் பதற்றப்பட்டான். நாம் வந்த நோக்கத்தைச் சொன்னதும் திருமுருகனின் முகத்தில் குழப்பம், இயக்கத்தோடு முரண்பட அவன் பயந்தான். 'அண்ணை! அவசரப்படாதீங்கோ நான் போய்க் கதைச்சுப் பார்க்கிறன்" என்றான். திருநந்தகுமாருக்குக் கடும் கோபம். 'விருப்பமென்றால் நீ எங்களோடு சேர், இல்லாட்டி விடு' என்று கோபமாய்ப் பேசி விட்டு எங்களை அழைத்துக் கொண்டு திரும்பிவிட்டான். ஓர் ஆடு மந்தையை விட்டு அச்சத்தால் திசை மாறியது. இதற்கிடையில் பேச்சால் வந்த வருமானம் நிற்பதில், சிவகுமாரனின் வீட்டில் முரண்பாடு ஏற்பட்டிருக்கும் போல. அம் முரண்பாட்டினால் சிவகுமாரனும் எங்கள் போராட்டத்திலிருந்து விலகிக் கொள்வதாய் பின்னர் அறிவித்தான். மற்றோர் ஆடு ஆசையால் திசை மாறியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாலைதீவு செல்ல வேண்டாம்

மத்திய அரசு அறிவுரை

புதுடில்லி,பெப்.08
மாலைதீவில் அரசியல் நெருக்கடி நிலவுகிறது. அங்கு அதிபர் யாமீன் அப்துல் கயூம் அவசர நிலையைப் பிரகடனம் செய்துள்ளார். அந்த நாட்டின் தலைமை நீதிபதி அப்துல்லா சயீத், நீதிபதி அலி ஹமீத் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாலைதீவு விவகாரத்தில் இந்தியா தலையிட்டுத் தீர்வு காண வேண்டும் என்று அதன் முன்னாள் அதிபர் முகமது நஷீத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நிலையில் மாலைதீவு நிலைமை தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி, அரசியல் தலைவர்கள் கைது செய்யப்பட்டமை கவலை அளிக்கின்றது. இந்த நிலையில், மாலைதீவுக்கு இந்தியர்கள் அத்தியாவசிய தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)



# 'மேதகு' என அழைக்காதீர்கள்

புதுடில்லி,பெப்.08
மேதகு என அழைக்காதீர்கள் என இந்தியத் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு கேட்டுக்கொண்டுள்ளார்.

மாநிலங்களவையில் ஐக்கிய ஜனதா தளக் கட்சியின் உறுப்பினர் ஹர்வான்ஸ் நாராயண் சிங் சில ஆவணங்களை தாக்கல் செய்த போது. எம்.பிக்கள் மற்றும் பிறர் என்னை மேதகு என அழைக்கும்போது சங்கடமளிக்கின்றது. எனவே இதுபோன்ற வார்த்தைகளை இனி வரும் காலங்களில் பயன்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன், எனத் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.


துணை ஜனாதிபதி

காலணித்துவ அகராதிக்கு ஆதரவாக நான் இல்லை. நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத்தொடரின் போது எம்.பி.க்கள் ஆவணங்களை சமர்பிக்கும் போது மன்றாடிக் கேட்கின்றேன் எனப் பயன்படுத்தக் கூடாது என எம்.பிக்களிடம் கேட்டுக் கொண்டார். கோரிக்கை அடங்கிய ஆவணம் வைக்கப்பட்டுள்ளது என்று மட்டும் சொல்லுங்கள் எனக் கேட்டுக் கொண்டார். இந்த நிலையில் மரியாதைக் குரிய தலைவர் அல்லது துணை ஜனாதிபதி என்றே என்னைக் கூறலாம் எனவும் வெங்கையா நாயுடு கேட்டுக் கொண்டுள்ளார். (ப)

# செலவைக் குறைக்க ஓர் ஊசி: 33 பேருக்கு எயிட்ஸ் தொற்று

லக்னோ,பெப்.08
உத்தரப்பிரதேச மாநிலம் உன்னாவோ மாவட்டத்தில் 556 பேருக்கு நடத்தப்பட்ட உடல் பரிசோதனையில் 33 பேருக்கு உயிர்க்கொல்லி நோயான எச்.ஐ.வி இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநில உன்னாவோ மாவட்டத்தில் அதிகளவில் எச்.ஐ.வி பாதிப்புக் குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், மாநில சுகாதாரத்துறை சமீபத்தில் குழு ஒன்றை நியமித்து ஆய்வு ஒன்றை நடத்தியது.

அந்தக் குழு 566 பேரைப் பரிசோதனை செய்ததில் தற்போது வரை 33 பேர் எச்.ஐ.வி நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அதிர்ச்சியளிக்கும் தகவலை வெளியிட்டது. இந்த நிலையில் மிகக் குறுகிய காலத்தில் இத்தனை பேர் எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டதற்கான காரணமும் வெளியாகியுள்ளது.



அங்குள்ள கிராமம் ஒன்றில் வசிக்கும் ராஜேந்திர குமார் என்பவர் சிகிச்சைக்காக வருபவர்களுக்கு ஒரே ஊசியைப் பயன்படுத்தி ஊசி போட்டுள்ளார். செலவைக் குறைக்கும் விதமாக அவர் இப்படிச் செய்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் அவரைப் பொலிஸார் கைது செய்து விராணை நடத்தி வருகின்றனர். ராஜேந்திரகுமார் முறையாக மருத்துவம் படித்தவர் இல்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ப)

# ரபேல் போர் விமான ஒப்பந்தம்: பிரதமர் நரேந்திர மோடி ஊழல்


ராகுல் காந்தி குற்றச்சாட்டு

புதுடில்லி,பெப்.08
பிரான்ஸ் நாட்டிடம் இருந்து 36 ரபேல் போர் விமானங்களை வாங்க மத்திய அரசு ஒப்பந்தம் செய்தது. காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்காலத்தில் பேசப்பட்ட விலையை விட தற்போது கூடுதல் விலை கொடுத்து வாங்கப்படுகின்றமையால் இதில் ஊழல் நடந்துள்ளது எனக் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஒரு தொழிலதிபர் பயனடைவதற்காக ரபேல் ரகப் போர் விமானப் பேர ஒப்பந்தத்தில் பிரதமர் நரேந்திர மோடி மாற்றம் செய்தார் எனக் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியிருந்தார். காங்கிரஸ் குற்றச்சாட்டு வெட்கக்கேடானது எனக் கடந்த நவெம்பரில் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன் கண்டனம் தெரிவித்து இருந்தார். இந்த நிலையில் இவ்விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்திலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி ,

ரபேல் போர் விமானம் வாங்க கொடுக்கப்பட்ட தொகையைத் தெரிவிக்கமாட்டோம் எனப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார். இதனுடைய பொருள் என்ன? அங்கு ஊழல் நடந்துள்ளது என்பதுதான் பொருள். மோடி தனிப்பட்ட முறையில் பாரீஸ் சென்று ஒப்பந்தத்தை மாற்றிவிட்டார். இதனை ஒட்டுமொத்தத் தேசமும் அறியும், எனக் கூறியுள்ளார்.

8 மாநிலங்களில் தேர்தல் நடைபெறவுள்ளநிலையில் பாரதிய ஜனதாவின் மீது மிகப்பெரிய குற்றச்சாட்டு எழுந்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ப)

# பா.ஜ.கா. தலைவர்களின் டுவிட்டர் பாக். ஆதரவு அமைப்பால் முடக்கம்

புதுடில்லி,பெப்.08
பா.ஜ.கா. தலைவர்களின் டுவிட்டர் கணக்குகள் பாகிஸ்தானின் ஆதரவு அமைப்பால் முடக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதுச்சேரித் துணைநிலை ஆளுநர் கிரண் பேடி,பாரதிய ஜனதாக் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் ராம் மாதவ் டுவிட்டர் கணக்கும் முடக்கப்பட்டுள்ளது.

துருக்கியைச் சேர்ந்த பாகிஸ்தான் ஆதரவு அமைப்பால் இந்த டுவிட்டர் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. பொலிவுட் நடிகர் அனுபம் கெர், பொருளாதார நிபுணர் சுவுசிக் பாசு, மாநிலங்களவை எம்.பி. சுவாபன் தாஸ்குப்தா ஆகியோரது டுவிட்டர் கணக்குகளும் பாகிஸ்தான் ஆதரவு அமைப்பால் முடக்கப்பட்டுள்ளது. முடக்கப்பட்ட டுவிட்டர் கணக்குகளை டுவிட்டர் நிறுவனம் தடைசெய்துள்ளது . பிரபலங்களில் உண்மையான கணக்குத்தான் என்பதை உறுதி செய்யும் வகையில் பயன்படுத்தப்படும் டிக் குறியீடும் நீக்கப்பட்டுள்ளது. (ப)

# பள்ளத்தாக்கில் கார் கவிழ்ந்த விபத்தில் 8 பேர் சாவு



உத்தரகாண்ட் மாநிலத்தில் கார் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

உத்தரகாண்ட் மாநிலம் சாம்பவாத் பகுதியில் நேற்றுக் காலை 8 பேர் ஒரு காரில் சென்றுகொண்டிருந்தனர். மலைப்பாதையில் சவாலா என்ற இடத்தில் வளைவில் திரும்பியபோது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார் திடீரென பள்ளத்தாக்கில் உருண்டு விழுந்தது.

இந்த விபத்தில் கார் முற்றிலும் நொறுங்கி, அதில் இருந்த 8 பேரும் உயிரிழந்தனர். விபத்துப் பற்றி தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இறந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# இந்திய முஸ்லிம்களை பாகிஸ்தானியர் என அழைத்தால் சிறைத் தண்டனை

ஐதராபாத் எம்.பி கோரிக்கை

இந்திய முஸ்லிம்களைப் பாகிஸ்தானியர்கள் என்று அழைப்பவர்களுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க கூடிய வகையில் சட்டம் இயற்ற வேண்டும் என்று ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சியின் தலைவரும் ஐதராபாத் எம்.பியுமான அசாதுதின் ஓவைசி கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களவையில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரரேணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய ஓவைசி இந்தக் கோரிக்கையை முன் வைத்தார். ஓவைசி கூறுகையில்,

இந்திய முஸ்லிம்களைப் பாகிஸ்தானியர்கள் என அழைப்பதைத் தண்டிக்கக் கூடிய குற்றமாக்க வேண்டும். இந்திய முஸ்லிம்களை பாகிஸ்தானியர்கள் என அழைப்பவர்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கக் கூடிய வகையில் சட்டம் இயற்ற வேண்டும். நரேந்திர மோடி தலைமையிலான அரசு, இது போன்ற சட்டத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்போவது இல்லை என்று தெரிவித்துள்ளார். (ப)

# உத்தரகாண்ட் முதலமைச்சரின் தேநீர் செலவு ரூ.68 லட்சம்

டேராடூன்,பெப்.08
உத்தரகாண்ட் மாநில முதலமைச்சர் பதவியேற்று ஒன்பது மாதங்களில் தேநீர் மற்றும் வகையறாக்களுக்கு மட்டும் 68 லட்சம் ரூபா செலவழித்துள்ளமை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது.

உத்தரகாண்ட் மாநிலத்தின் முதலமைச்சராகப் பதவி வகித்து வருபவர் பா.ஜ.க.வைச் சேர்ந்த திரிவேந்திர சிங் ராவத். இவர் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதற்கிடையே, ஹேமந்த் சிங் குனியா என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், முதலமைச்சர் அலுவலகத்தில் கடந்த மார்ச் மாதம் பதவியேற்றது முதல் தேநீர் வகையறாக்களுக்கு எவ்வளவு ரூபா செலவிட்டுள்ளன எனக் கேட்டு விண்ணப்பித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில், முதலமைச்சர் கடந்த 9 மாதத்தில் மட்டும் 68 லட்சத்து 59 ஆயிரத்து 865 ரூபா செலவிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இதேபோல், முந்தைய முதலமைச்சர், கடந்த 2014 – 16ஆம் ஆண்டுகளில் தனது முதல்வர் அலுவலகத்தில் தேநீர் மற்றும் வகையறாக்களுக்கு என 1.5 கோடி ரூபா செலவு செய்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

வினாத்தாள் 11 பகுதி- II இன் தொடர்ச்சி...

பின்வரும் வினாக்களுக்குவிடைஎழுதுக

12. 299+ 11 =..............................................

13. (4) (9) (3) இவ்விலக்கங்களைக் கொண்டுஉருவாக்கக் கூடியமிகப் பெரியஎண் எது?

.......................................................................................................................

14. 3496 இல் இலக்கம் 9 காட்டும் இடம் யாது?

.......................................................................................................................

15. குவியல் ஒன்றில் 9 பழங்கள் வீதம் 8 குவியல்களில் உள்ளபழங்களை எத்தனை?

.......................................................................................................................

16. 924cm எத்தனை m, cm உண்டு?

.......................................................................................................................

17. ☐ ÷ 9 = 12எனின் வெற்றுக் கூட்டிற்குள் வரும் எண் யாது?

.......................................................................................................................

18. ☐ ☐ ☐ ☐ ☐ ☐ ☐ ☐ ☐ ☐

இதில் $\frac{1}{2}$ வாசியைநிழற்றுக.

19. 20,25,30,35 .......................................... அடுத்துவரும் எண் யாது?

20. $\frac{30}{100}$ஐ தசமமாகஎழுதினால் வரும் விடையாது?

21.

| | |
|---|---|
| 26 | 32 |
| 28 | 23 |
| 48 | 36 |

அடைப்புக்குள் உள்ளஎண்களில் 4 இன் மடங்குகளை தெரிவுசெய்துஎழுதுக.

..........................................................................................

**22-46 வரையிலான வினாக்களுக்கு சரியானவிடையின் கீழ்க் கோடிடுக.**

22. நிலத்தில் குழி தோண்டிமுட்டையிடுவது

1. நண்டு 2. ஓணான் 3.தவளை 4. வண்ணாத்துப்பூச்சி

23. நன்னீர் மீன்களில் ஒன்று

1. திலாப்பியா 2. திருக்கை 3. தோறா 4.சுறா


24. நீரிலும் நிலத்திலும் வாழ்வது

1. தவளை 2. மீன் 3. கடற்குதிரை 4. பல்லி

25. இலங்கையின் தேசியமரம்


1. நாகமரம் 2. வெள்ளரசு 3. ஆல் 4.தேயிலை







வினாத்தாள் 11 பகுதி- I இன் தொடர்ச்சி...

39. 


**சிறிய பேணியில் இருந்து எத்தனை தடவைகள் ஊற்றினால் பெரிய பேணியில் அரைவாசி நிரம்பும்**

1. 12 தடவைகள் 2. 15 தடவைகள் 3. 20 தடவைகள்

**40. தரப்பட்டுள்ளகவிதையின் நான்குவரிகளின் ஒழுங்குமுறையாது?**

1. A - ஆசான் சொல் கேட்டுநாம்
2. B -உயர்ந்துநாமும் சிறந்திட
3. C -அன்பாய் பண்பாய் பயிலுவோம்
4. D -வளமும் அறிவும் பண்பட

1.DCAB 2.DBAC 3.BCDA

வினாத்தாள் 11 பகுதி- II

நேரம்- 1 மணி 15 நிமிடம்

01. பின்வரும் பந்தியைவாசித்துவினாக்களுக்குவிடைதருக

பாடம் முடிந்துமணியும் அடித்தது. ஆசிரியர் வகுப்பைவிட்டுவெளியேறினார். உடனே ஆதவன் ஓடிவந்துசத்தியனின் கரங்களைப் பிடித்துக் கொண்டு "சத்தியா! நீ செய்த உதவிக்கு நன்றி. நான் உனக்கு எவ்வளவோ துன்பங்கள் செய்திருப்பேன். நீ அவற்றை எல்லாம் மறந்து இன்று என்னை ஆசிரியரிடமிருந்து காப்பாற்றினாய். உன்னைப் போன்ற உயர்ந்த உள்ளம் எவருக்கும் வராது" என்றுதன் கண்களில் கண்ணீர் மல்கக் கூறினான்.

1. ஆதவனுக்கும்,சத்தியனுக்கும் உள்ளஉறவுஅல்லதுதொடர்புயாது?

.......................................................................................................................

2. உயர்திணைப் பெயர்ச் சொற்கள் இரண்டுதருக?

.......................................................................................................................

3. தன்மைஒருமைஎதிர்காலவினைமுற்றுஒன்றுதருக?

.......................................................................................................................

4. வினையெச்சம் ஒன்றுதருக?

.......................................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. "நான் உனக்குதுன்பம் செய்திருப்பேன்" இவ்வாக்கியத்தைபன்மைவடிவில் எழுதுக?

.................................................................................................................................

6. விசிறியும் சுழியும் உள்ளசொல் யாது?

.................................................................................................................................

7. பந்தியில் வந்துள்ளநிறுத்தற் குறிகளைகுறிப்பிடுக?

.................................................................................................................................

8. ஒத்தசொற்களைபந்தியிலிருந்துஎழுதுக.

1. நயனம் .............................. 2. மனம் ..............................

3. குரு .............................. 4. கை ..............................

9. பிரித்துஎழுதுக.

1. செய்திருப்பேன் .............................. 2. கண்ணீர் ..............................

10. முன்னிலைஒருமைப் பெயர்ச் சொல்லைபந்தியிலிருந்துஎழுதுக.

.................................................................................................................................

02. வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமானசொல்லின் கீழ்க் கோடிடுக.

1. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட மருத்துவமனை .............................. நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்.
(ஊளியர்களால்,ஊழியர்களால்)

2. .............................. திருவினையாக்கும்.
(முயற்சி,முயற்ச்சி)

3. .............................. அகற்றும் பணியில் நகரசபைத் தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டனர்.
(குப்பை கூளங்களை,குப்பை கூழங்களை)

4. சீடன் தனது .............................. சென்றுநடந்தவற்றைக் கூறினான்.
(குறுவிடம்,குருவிடம்)

03. பன்மைவாக்கியங்களாகஎழுதுக.

1. நான் ஓடினேன் ..............................

2. மரம் அசைந்தது ..............................

04. பின்வரும் தொடர்களுக்குரியதனிச் சொல்லைஎழுதுக.

1. நடக்க இருப்பவற்றைமுன்னரே கூறுபவன் ..............................

2. கடவுள் இல்லையெனவாதிடுபவன் ..............................

3. அரசன்,ஆசிரியர்,தந்தை,தாய்,தமையன் ஆகியோர் ..............................

05. வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமானமுடிக்கும் சொல்லைஅடைப்புக்குள்ளிலிருந்துதெரிவுசெய்துகோடிடுக.

1. கோழிகள் குப்பைகளைக் .............................. (கிளறியது,கிளறின)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





2. விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை ..............................
(ஆரம்பமாகின,ஆரம்பமாகும்)

3. நாங்கள் தினமும் காலையில் பால் .............................. (குடித்தோம்,குடிப்போம்)

4. அந்தஓவியங்கள் யாவும் கண்களுக்குவிருந்தளிப்பவையாக ..............................
(இருந்தது, இருந்தன)

06. பின்வரும் பழமொழிகளின் கருத்தைஎழுதுக.


1. மின்னுவதெல்லாம் பொன்னல்ல ..............................

2. கடுகுசிறிதானாலும் காரம் பெரிது ..............................

07. பின்வரும் சொற்களுக்கானதமிழ் சொல்லைஎழுதுக.

1. தும்றிய .............................. 2. கொஸ்ஸ ..............................

08. பின்வரும் படத்திற்கானசிங்களசொல்லைதமிழில் எழுதுக.



..............................

09. பின்வரும் சொற்களைதமிழில் எழுதுக.

1. Safety.............................. 2. Knife..............................

10. பின்வரும் சொற்களைஆங்கிலத்திற்குமாற்றிஎழுதுக.

1. நாம் இலங்கையர் ..............................

2. காற்று ..............................

11. விளையாட்டுமனதிற்குமகிழ்ச்சியையும்,உடலுக்குஆரோக்கியத்தையும் தருகிறது. "விளையாட்டின் பயன்கள்" எனும் தலைப்பில் மூன்றுவாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களுக்கு மேல் இடம்பெறவேண்டும் எழுவாய், பயனிலை தொடர்புகளும்,எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்கவேண்டும்)

1..............................................................................................

2..............................................................................................

3..............................................................................................

## 22 இந்திய மாலுமிகளுடன் கடத்தப்பட்ட கப்பல் விடுப்பு



புதுடில்லி,பெப்.08

மேற்கு ஆபிரிக்கக் கடற் பகுதியில் கடற்கொள்ளையர்களால் 22 இந்திய மாலுமிகளுடன் கடத்தப்பட்ட எண்ணெய்க் கப்பல் நேற்று விடுவிக்கப்பட்டது.

மேற்கு ஆபிரிக்கப் பகுதியில் உள்ள கயானா வளைகுடாக் கடலில் ஜப்பானின் ஓசியன் டிரான்சிட் கரியர் என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பல் 8.1 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான பெற்றோலுடன் சென்று கொண்டிருந்தது. பெப்ரவரி முதலாம் திகதி முதல் அந்தக் கப்பலில் இருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

பின்னர் அந்தக் கப்பல் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டமை தெரியவந்தது. மாயமான கப்பலில் 22 இந்தியர்கள் பணியாற்றி வந்தனர். கப்பலைத் தேடும் பணியில் கடற்படை அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில், பிணைத்தொகை செலுத்திய பின் கடற்கொள்ளையர்கள் கப்பலை நேற்று விடுவித்தனர். (ப)

# தாய்வானில் நிலநடுக்கம்



2 பேர் சாவு

தைபே,பெப்.08

தாய்வானில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக 2 பேர் பலியாகியமையுடன் 100இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந் துள்ளனர்.

தாய்வான் நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.4 ஆகப் பதிவானது.

கடற்கரை நகரமான ஹுவாலியனில் இருந்து வடக்கு திசையில் சுமார் 14 கிலோ மீற்றர் தொலைவிலும், கடலுக்கடியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் ஆழத்திலும் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டது.

நிலநடுக்கத்தால், ஹுவாலியன் நகரில் உள்ள 4 கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இடிபாடுகளில் சிக்கி 2 பேர் பலியாகினர். மேலும் 114 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். தகவலறிந்து பேரிடர் மீட்புப் பணியினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ப)

# இந்திய அரசு மாலைதீவுக்கு ராணுவத்தை அனுப்ப வேண்டும்

கொழும்பு,பெப்.08

இந்திய அரசு மாலைதீவுக்கு இராணுவத்தை அனுப்ப வேண்டும் என முன்னாள் அதிபர் முகமது நஷீத் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாலைதீவில் அதிபர் அப்துல்லா யாமினின் அதிரடி நடவடிக்கையால் பெரும் அரசியல் குழப்பம் நீடிக்கின்றது. அங்கு நெருக்கடி நிலைப் பிரகடனம், அரசியல் கட்சியினர் மற்றும் நீதிபதிகள் கைது நடவடிக்கை நிலையை மோசமாக்கி வருகிறது. போராட்டமும் தொடர்கிறது. சமூக வலைத்தளங்களிலும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், முன்னாள் அதிபர் முகமது நஷீத் டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில்,

மாலைதீவு மக்களின் சார்பாக இந்தக் கோரிக்கையை நாங்கள் விடுக்கிறோம். மாலைதீவு அதிபரால் கைது செய்யப்பட்ட நீதிபதிகள், அரசியல் கட்சியினரை மீட்க இராணுவ பலத்துடன் இந்தியா தூதரை அனுப்ப வேண்டும். அமெரிக்க வங்கிகள் வழியாக மாலைதீவு பிராந்தியத் தலைவர்களுக்குச் செல்லும் நிதிப் பரிமாற்றத்தை அமெரிக்கா நிறுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டு உள்ளார்.



முகமது நஷீத் கோரிக்கை

# முடிந்தால் என்னை கைது செய்யுங்கள்

லாகூர்,பெப்.08

மும்பைத் தாக்குதல் வழக்கில் முக்கிய குற்றவாளியும் பயங்கரவாதியுமான ஹபீஸ் சயீத், முடிந்தால் தன்னைக் கைது செய்து பாருங்கள் என்று பாகிஸ்தான் அரசுக்கு சவால் விடுத்துள்ளார்.

ஹபீஸ் சயீத் சவால்



பாகிஸ்தானில் உள்ள லாகூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் ஹபீஸ் சயீத் பேசியவை வருமாறு:-

அரசு அடக்க முயன்றால் இப்போது இருப்பதை விடப் பல மடங்கு பலத்துடன் நாங்கள் மீண்டும் எழுவோம். ஆனால், காஷ்மீர் மக்களுக்கான எனது போராட்டம் ஒரு போதும் ஓயாது. முன்பு பிரதமராக இருந்த நவாஸ் செரீப், காஷ்மீர் விவகாரத்தில் உரிய முறையில் செயற்படவில்லை. முடிந்தால் பாகிஸ்தான் அரசு என்னைக் கைது செய்யுங்கள் என்று தெரிவித்துள்ளார். (ப)

# யோகா மூலம் 25 லட்சம் ரூபா சம்பாதிக்கும் 7 வயதுச் சிறுவன்

பீஜிங்,பெப்.08

சீனாவைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவன் யோகா மூலம் 10 லட்சம் ரூபா சம்பாதிப்பது அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவைச் சேர்ந்த சன் சுயாங் என்ற 7 வயதுச் சிறுவன் யோகா மையங்களில் யோகா கற்றுக்கொடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளான். மிகச்சிறிய வயதில் யோகாவை எளிதாகக் கற்றுக் கொடுக்கும் சுயாங், இதன் மூலம் இலங்கை மதிப்பில் 25 லட்சம் ரூபா சம்பாதித்து வருகின்றான்.

சுயாங் இரண்டு வயதிலிருந்து யோகா கற்று வந்தமையால் அவனுக்கு யோகா மீது ஈர்ப்பு அதிகரித்துள்ளது. யோகாவில் அவனுடைய திறமையைக் கண்ட அனைவரும் யோகா கற்றுக்கொள்ள ஆசைப்படுகின்றனர். (ப)



# சிரியாவில் குண்டுவீச்சு பொதுமக்கள் 29 பேர் சாவு!



சிரியாவில் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சில் பொதுமக்கள் 29 பேர் பலியாகியுள்ளனர்.

கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ள நகரங்களை அதிபர் படைகள் மீட்டு வருகின்றன. கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள அனைத்து நகரங்களையும் மீட்காமல் விடமாட்டோம் என்று பார் அல் ஆசாத் அரசு சபதம் செய்து, தாக்குதல் தொடுத்து வருகின்றது.

இந்த நிலையில் அங்கு அதிபர் படைகளின் போர் விமானங்கள் கடும் குண்டுவீச்சில் ஈடுபட்டன. அந்தக் குண்டுகள் ஜமால்கா, அர்பாயீன், ஹாஸா, பெய்ட்டு சூவா உள்ளிட்ட நகரங்களிலும் விழுந்து பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தின. இந்தத் தாக்குதலில் அப்பாவி மக்கள் 29 பேர் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

சிரியா அதிபரின் படைகள் தொடர்ந்து இரசாயன வாயுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன என அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகள் கவலை தெரிவித்து உள்ளன. (ப)

# உலகின் சக்திவாய்ந்த ரொக்கெட் வெற்றிகரமாக ஏவப்பட்டது

அதிக வேகத்தில் செல்லும் உலகின் மிகச் சக்திவாய்ந்த பெல்கான் ரொக்கெட்டை ஸ்பேஸ் - எக்ஸ் நிறுவனம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

கலிபோர்னியா மாகாணத்தில் ஸ்பேஸ் - எக்ஸ் நிறுவனம் புதிய ரக ரொக்கெட்டுகளைத் தயாரித்து வருகிறது. விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்காவை உலகத்தரத்தில் உயர்த்தியதில் இந்த நிறுவனம் முக்கிய பங்கு வகித்துள்ளது.

உலகின் மிக சக்தி வாய்ந்த அதிக வேகத்தில் செல்லும் புதிய ரக பெல்கான் ரொக்கெட்டை இந்த நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்த ரொக்கெட் மற்ற ரொக்கெட்டைகளை விட அதிக எடைகொண்ட செயற்கைக்கோள்களைச் சுமந்து செல்லும் திறன் கொண்டது. (ப)



# அமெரிக்க ஜிம்னாஸ்டிக் வைத்தியருக்கு மேலும் 125 ஆண்டு சிறைத் தண்டனை

ஜிம்னாஸ்டிக் வீராங்கனைகளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய குற்றத்துக்காக லாரி நாசருக்கு மேலும் 125 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஜிம்னாஸ்டிக் கிளப் மற்றும் மிச்சிகன் மாகாணப் பல்கலைக்கழக விளையாட்டுத் துறையில் வைத்தியராக இருந்தவர் லாரி நாசர்.

இவர் பணியில் இருந்த போது இளம் ஜிம்னாஸ்டிக் வீராங்கனைகளிடம் பாலியல் லீலையில் ஈடுபட்டார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

அது தொடர்பான வழக்கில் கடந்த டிசெம்பர் மாதம் 60 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற மேலும் ஒரு பாலியல் வழக்கில் அவருக்கு மேலும் 40 முதல் 125 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதுவரை அவருக்கு 300 ஆண்டுகள் சிறை விதிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானில் சீனர்களுடைய பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும்



சீனா வேண்டுகோள்

பீஜிங்,பெப்.08

பாகிஸ்தானில் சீனர்களுடைய பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும் எனச் சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாகிஸ்தானில் கிளிப்டன் நகரில் ஜம்ஜமா பூங்கா அருகே நேற்றுமுன்தினம் சீனர் ஒருவர் காரில் வைத்துச் சுடப்பட்டார்.

இந்தச் சம்பவத்திற்குச் சீனா கடும் கண்டனம் தெரிவித்தது. இந்த நிலையில், சீன வெளியுறவு அமைச்சகம் விடுத்துள்ள வேண்டுகோளில்,

உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்கும் தொடர்புடைய நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் மேம்படுத்துவதற்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்கின்றோம். பாகிஸ்தானில் உள்ள சீன நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அந்நாடு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு மட்டும் ஏன் அதிகமான பரிசுத் தொகை? சமமாக வழங்க வலியுறுத்துகின்றார் டிராவிட்!

தனக்கு மட்டும் ரூ.50 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளதால் இந்திய ஜூனியர் கிரிக்கெட் அணிப் பயிற்சியாளர் ராகுல் டிராவிட் அதிருப்தியில் இருக்கிறார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியூஸிலாந்தில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. ஒரு போட்டியில் கூட தோற்காமல் உண்மையான சாம்பியனைப் போல ஆடியது இந்திய அணி. வெற்றிக்குப் பரிசாக இந்திய ஜூனியர் கிரிக்கெட் அணித் தலைமைப் பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டுக்கு ரூ.50 லட்சம் பரிசுத் தொகை அறிவித்தது. உச்சநீதிமன்றம் நியமித்த பி.சி.சி.ஐயின் நிர்வாகிகள் கமிட்டி. உதவி பணியாளர்களான பந்து வீச்சு பயிற்சியாளர் பராஸ் மம்ப்ரே, களத் தடுப்பு பயிற்சியா ளர் அபே சர்மா, உடற்பயிற்சிப் பயிற்றுநர் யோகேஷ் பார்மர், பயிற்சியாளர் ஆனந்த் தாதே, இயன்முறை யாளர் மான்கேஷ் கெய்க்வாட் மற்றும் வீடியோ பகுப்பாளர் தேவராஜ் ரெளட் ஆகியோர் உதவி ஊழி யர்கள் என அழைக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு தலா ரூ.20 லட்சமும், வீரர்களுக்கு





நிஜ வாழ்விலும் 'ஜென்டில்மேன்' எனப் பலரும் புகழாரம்

தலா ரூ.30 லட்சமும் பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட்டது. பார பட்சம் காட்டக்கூடாது. ஆனால், இவ்வாறு பரிசுத் தொகையில் பாரபட்சம் காட்டப் பட்டதில் டிராவிட்டுக்கு விருப்பம் இல்லை என கூறப்படுகிறது.

அனைத்துப் பணியாளர்களுக்கும் ஒரே மாதிரி பரிசுத் தொகை வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று தனது அதிருப்தியை டிராவிட் பி.சி.சி.ஐக்கு தெரியப் படுத்தியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மறைமுகமாக சொன்ன ராகுல் டிராவிட் சமீபத்தில் டிராவிட் அளித்த பேட்டியில் கூட இந்த கருத்து அவருக்குள் இருப்பதை உணர முடிந்தது. நிருபர்களிடம் அவர் கூறுகையில், "ஜூனியர் உலக கோப்பை வெற்றிக்கு பிறகு அனைவரது கவனமும் (புகழ்ச்சியும்) என்மீது மட்டுமே இருப்பது ஆச்சரியம் அளிக்கிறது. உதவிப் பணியாளர்களின் பணியைக் குறைத்துச் சொல்ல முடியாது. அனைவரும் ஓர் அணியாக இணைந்து பணியாற்றினோம். ஒவ்வொருவர் பெயராக சொல்ல விரும்பவில்லை என்றாலும், உதவி பணியாளர்கள் அதிக உழைப்பைக் கொட்டினர். நமது அணிக்காக இயன்ற வரை 'பெஸ்ட்' என்பதை கொடுத்தோம்" – என்றார் டிராவிட்.

தனக்குப் பரிசுத் தொகை கிடைத்த வரை மகிழ்ச்சி என்று நினைக்காமல் அனைவரையும் சமமாக நடத்துமாறு டிராவிட் கூறியுள்ளமை கிரிக்கெட் உலகில் அவரது மதிப்பை மேலும் உயர்த்தியுள்ளது.

கிரிக்கெட் ஆட்டத்தில் 'ஜென்டில்மேன்' என அனைவராலும் புகழப்படும் டிராவிட், வாழ்க்கையிலும் அதே போன்ற நேர்மையான கொள்கைகளைக் கடைபிடித்து வருகிறார்கள் என்று பெருமிதம் தெரிவிக்கிறார்கள் முன்னாள், சக ஆட்டக்காரார்கள்.

2017ஆம் ஆண்டில் அவருக்கு ஐ.பி.எல் அணியின் பயிற்சியாளராகும் வாய்ப்பு வந்தது. பணம் மற்றும் புகழைப் பெறக்கூடிய அந்த வாய்ப்பை மறுத்த டிராவிட், தேசிய அணியின் வேலைக்கே முக்கியத்துவம் கொடுப்பது எனத் தீர்மானித்து, ஜூனியர் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியை ஏற்றார். (உ)

# ஆயுள் தடையை நீக்க ஸ்ரீசாந்த் மேன்முறையீடு

## பி.சி.சி.ஐ. பதிலளிக்க 4 வார காலக்கெடு

ஸ்பாட் பிக்சிங் என்ற சூதாட்டச் சர்ச்சையில் சிக்கியதால் தமக்கு எதிராக விதிக்கப்பட்ட ஆயுள் தடையை எதிர்த்து வேகப் பந்துவீச்சாளர் சாந்தகுமாரன் ஸ்ரீசாந்த் தொடர்ந்த வழக்கில், 4 வாரங்களுக்குள்ளாக விளக்கம் அளிக்க வேண்டும் என்று கிரிக்கெட் சபைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு நடந்த ஐ.பி.எல்.ரி 20 தொடரின்போது 'ஸ்பாட் பிக்சிங்' கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என ராஜஸ்தான் ரோயல்ஸின் ஸ்ரீசாந்த் உட்பட சில வீரர்கள் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து, ஸ்ரீசாந்த் துக்கு ஆயுள் தடை விதிக்கப்படுவதாக பி.சி.சி.ஐ அறிவித்தது.

இந்தத் தடையை கேரள உயர் நீதிமன்ற தனி நீதிபதி தள்ளுபடி செய்த நிலையில், கிரிக்கெட் சபை மேல் முறையீடு செய்தது.

இதை விசாரித்த டிவிஷன் பெஞ்ச், ஆயுள் தடை விதிக்கப்பட்டமை செல்லும் எனத் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஸ்ரீசாந்த் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பாக 4 வாரங்களுக்குள்ளாக விளக்கம் அளிக்குமாறு கிரிக்கெட் சபைக்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.





### மகளிர் ஒரு நாள் கிரிக்கெட்:

# தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இந்தியா!

சர்வதேச கிரிக்கெட் பெண்கள் சாம்பியன்ஷிப் போட்டியின் நேற்று கடந்த திங்கட்கிழமை நடந்த ஆட்டத்தில் இந்திய அணி 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தியது.

ஐ.சி.சி. பெண்கள் சாம்பியன்ஷிப் போட்டியில் தென்னாபிரிக்காவின் கிம்பெர்லியில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் இந்தியா – தென்ஆப்பிரிக்கா அணிகள் மோதின. 'நாணயச் சூழற்சியில்' வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக் கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 213 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக மந்தனா 84 ஓட்டங்க ளும், கப்டன் மிதாலிராஜ்45 ஓட்டங்களும்எடுத்தனர்.

பின்னர் 214 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய தென்னாபிரிக்க அணி, இந்திய வீராங்கனைகளின் அபாரப்ந்பந்து வீச்சுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் 43.2 ஓவர்களில் 125ஓட்டங்களில் சுருண்டது. இதனால் இந்திய அணி 88ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்திய அணி தரப்பில் கோஸ்வாமி 4 விக்கெட்டுகளும், ஷிகா பாண்டே 3 விக்கெட்டுகளும், பூணம் யாதவ் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினார்கள். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஆவது ரி - 20:

# ஸிம்பாப்வே அணியை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றிய ஆப்கன்



ஸிம்பாப்வே அணிக்கு எதிரான 2ஆவது ரி - 20 போட்டியில் 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான், 2:0 என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றி அசத்தியது.

ஆப்கானிஸ்தான் மற்றும் ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான 2 ரி - 20 மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. சார்ஜாவில் உள்ள மைதானத்தில் நடைபெற்ற முதல் ரி - 20 போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

இந்த நிலையில், இரண்டாவது ரி - 20 போட்டி சார்ஜாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற ஸிம்பாப்வே பந்துவீச்சைத் தேர்வு செய்தது. அதன்படி ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது.

ஆப்கானிஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக மொகமது சாத், கரிம் சாதிக் ஆகியோர் களமிறங்கினர். 19 ஓட்டங்களுக்கு சாத் ஆட்டமிழந்தார். அதன்பின் ஜோடி சேர்ந்த கப்டன் அஸ்கார் ஸ்டானிக்சாய் நிதானமாக ஆடினார். இந்த ஜோடி அரை சதம் கடந்தது. அணியின் எண்ணிக்கை 75 ஆக இருக்கும் பாது கப்டன் ஆட்டமிழந்தார். அதன்பின் களமிறங்கிய மொகமது நபி அதிரடியாக ஆடினார். அவர் 26 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 2 பவுண்ரிகள் அடித்து 45 ஓட்டங்களில் பவிலியன் திரும்பினார்.

இதையடுத்து, ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்தது. ஸிம்பாப்வே அணி சார்பில் சடாரா 3 விக்கெட்டுகளும், ஜார்விஸ், முஜாராபானி, க்ரீமர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

இதைத்தொடர்ந்து, 159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஸிம்பாப்வே களமிறங்கியது. ஆனால் ஆப்கானிஸ்தான் அணியினரின் பந்து வீச்சிலும், துடிப்பான களத்தடுப்பிலும் ஸிம்பாப்வே அணி சிக்கியது.

அந்த அணியின் சிக்கந்தர் ராசா மட்டும் ஓரளவு தாக்குப்பிடித்து ஆடினார். அவர் 26 பந்துகளில் ஒரு சிக்ஸர், 5 பவுண்ரிகள் அடித்து 40 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனால் ஸிம்பாப்வே அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 141 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து, 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஸிம்பாப்வே அணியை வென்றதுடன் தொடரையும் 2:0 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் அணி தொடரைக் கைப்பற்றி அசத்தியது. ஆட்ட நாயகன் விருதை மொகமது நபி வென்றார்.

# மேலும் 2 மாதங்களுக்கு சானியா மிர்ஸா ஓய்வு



இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஸாவின் காயம் குணம் அடையாததால் அவரை மேலும் 2 மாதங்கள் ஓய்வில் இருக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் சானியா மிர்ஸா காயமடைந்தார். இதையடுத்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் ஓய்வில் இருந்து வருகிறார். இந்த நிலையில், அவரது காயம் குணம் அடையாததால் அவர் மேலும் 2 மாதங்கள் ஓய்வு எடுக்கவுள்ளார்.

இதுகுறித்து கிரேட்டர் நொய்டாவில் நேற்று சானியா கூறும்போது -

மேலும் 2 மாதங்கள் நான் ஓய்வு எடுக்கவேண்டும் என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். வலது மூட்டில் ஏற்பட்டுள்ள வலி குறையவில்லை. இதற்கு ஓய்வுதான் சரியான மருந்து. அறுவை சிகிச்சையால் கூட அது குணமாகாது என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். ஆஸ்திரேலிய ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் போட்டியைப் பார்ப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. விளையாடாமல் அந்தப் போட்டியைப் பார்ப்பது மட்டும் என்பது மிகக் கடினமான விஷயமாகும். ஆனால், நான் முதல் முறையாக காயமடையவில்லை.

இதுபோன்ற காயங்கள் ஏற்பட்டு 3 முறை அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். உடல் வலியை விட மன வலியை அதிகமாக உணர்கிறேன். 2003 இல் தொழில்முறை டென்னிஸ் வீராங்கனையாக உருவானேன். குடும்பத்தை விட்டு ஹோட்டல் ரூமில் தனியாக அடைந்து கிடப்பது கஷ்டமான விஷயமாக இருந்தது. 2017 ஆம் ஆண்டில் நான் ஒரே ஒரு டபிள்யூ டீஏ பட்டம் மட்டுமே வென்றேன். ஆனால் 2016 இல் 8 பட்டங்களையும், 2015இல் 10 பட்டங்களையும் கைப்பற்றினேன்.

இன்று புதன்கிழமை தொடங்கும் பெடரேஷன் கிண்ணப் போட்டி இந்திய அணிக்கு சவாலாக இருக்கும். 2002 இல் நான் முதல்முறையாக ஆசிய விளையாட்டுப் போட்டியில் விளையாடினேன். அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் விளையாடுவேனா என்பது தெரியாது. - என்றார்.

கிரேட்டர் நொய்டாவிலுள்ள சூப்பர்டெக் ஸ்போர்ட்ஸ் வில்லேஜ் டென்னிஸ் அகாடமியில் ஓய்வு எடுத்து வருகிறார் சானியா.

(உ)

## குளிர்கால ஒலிம்பிக்:

# தென் கொரியாவுக்குச் சகோதரியை அனுப்பும் வடகொரிய அதிபர்

தென் கொரியாவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கான வடகொரியாவின் உயர்மட்டக் குழுவினருடன், அதிபர் கிம் ஜாங் உன் தனது சகோதரியை அனுப்பவுள்ளார்.

தென்கொரியாவில் வரும் 9ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை குளிர்கால ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ளது. தென் கொரியா - வடகொரியா இடையே போர்ப்பதற்றம் நிலவி வரும் சூழ்நிலையில், வடகொரிய வீரர்கள் விளையாட்டில் பங்கேற்பார்களா? என்ற கேள்வி எழுந்தது. ஆனால் ஒலிம்பிக்கில் தனது நாடு கலந்துகொள்ளும் என்று வடகொரிய அதிபர் கிம் ஜாங் தெரிவித்தார். மேலும், வடகொரிய வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் உயர்மட்டக்குழுவை அனுப்பவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், அதிபர் கிம் ஜாங் உன் தனது இளைய சகோதரியான கிம் யோ ஜாங்கை தென் கொரியாவுக்கு அனுப்புகிறார். வடகொரிய நாடாளுமன்றத் தலைவர் கிம் ஜோங் நாம் தலைமையிலான ஒலிம்பிக் உயர்மட்டக் குழுவில் கிம் யோ ஜாங் இணைய உள்ளார் எனத் தென் கொரியாவின் ஒற்றுமை அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் முக்கிய முடிவுகளை எடுக்கும் குழுவான தொழிலாளர் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினராக கிம் யோ ஜாங் கடந்த ஆண்டு பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது.



# ரி – 20 அணிக்கு சந்திமல் தலைவர்



பங்களாதேஷ் அணிக்கெதிரான ரி - 20 தொடரில் விளையாடவுள்ள இலங்கை அணிக்கு சந்திமல் தலைமை தாங்கவுள் ளார் என இலங்கைக் கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

பங்களாதேஷுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அவ்வணிக்கு எதிராக 2 ரி - 20 போட்டித் தொடரில் விளையாடவுள்ளது.

இந்த நிலையில் பங்களாதேஷ் அணிக்கு எதிராக விளையாடவுள்ள இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது ரி - 20 போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதியும் 2 ஆவது ரி - 20 போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளது.

## ரியோ ஒலிம்பிக்கில் சூதாட்டம்?

ரியோ ஒலிம்பிக் போட்டித் தொடரில் நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் சூதாட்டம் நடந்திருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து சர்வதேச ஒலிம்பிக் பை, அதுதொடர்பாகச் சர்வதேச குத்துச்சண்டைச் சங்கத்துக்கு எதிராக விசாரணையை தொடங்கியிருப்பதுடன் டோக்கியோ ஒலிம்பிக்கில் குத்துச்சண்டையை இரத்துச் செய்யும் எச்சரிக்கையையும் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக் கிண்ண மும்முனை ரி - 20 கிரிக்கெட்

பங்களாதேஷ்- இலங்கை மற்றும் இந்திய அணிகள் பங்கேற்கும் சுதந்திரக் கிண்ண ரி-20 மும்முனை கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 6ஆம் திகதி முதல் கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டித்தொடர் 18ஆம் திகதி வரை கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெறும்.

முதலாவது போட்டி இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையில் மார்ச் மாதம் 6ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

(ப)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகச் சட்டத்தை நடைமுறைப் படுத்த அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

இந்த 48 மணி நேரத்தில் எந்த வகையிலும் எவ்வித பிரசாரங்களையும் முன்னெடுக்க முடியாது என்பதால் அதுதொடர்பில் கூடிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவன்குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்று (நேற்று) நள்ளிரவுடன் அனைத்து விதமான பிரசாரங்களும் தடைசெய்யப்படுகின்றன. வீடு வீடாகச் சென்று வாக்குக்கேட்பதும் நேற்று இரவு 9 மணியுடன் நிறைவுக்கு வருகின்றது. எனவே அதன் பின்னர் உள்ள 48 மணி நேர மௌன காலத்தில் எவரேனும் பிரசாரங்கள் செய்வார்களாயின் அவர்களுக்கு எதிராக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் இக்காலப்பகுதியில் வேட்பாளரின் வீட்டிலோ காரியாலயத்திலோ கூட, கட்டவுட்களைக் காட்சிப்படுத்த முடியாது. அது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும் – என்றார். (ஐ)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராமங்களில் முகாமிட்டு தீயாகப் பிரசாரம் செய்தனர்.

இந்நிலையில், நேற்று நள்ளிரவு 12 மணியுடன் பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் நிறைவுக்கு வந்தன.

கூட்டரசின் பிரதான பங்காளியான ஐக்கிய தேசியக்கட்சி தமது அரசியல் கோட்டையான கொழும்பில் இறுதிப் பரப்புரையை கட்சித்தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடத்தியது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் முகாம் எனக்கருதப்படும் பொலனறுவை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இறுதியாட்டத்தை ஆடியது.

இவ்விரு பிரதான கட்சிகளுக்கும் சவால்விடுக்கும் வகையில் உதயமாகியுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இறுதிப் பரப்புரைக் கூட்டத்தை ஹோமாகமவில் நடத்தியது.

ஜே.வி.பியின் இறுதிக் கூட்டமும் பிரமாண்டமாக மஹரகமவில் நடைபெற்றது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன வடக்கிலும், கிழக்கிலும் இறுதி நாள் கூட்டத்தை நடத்தின.

தமிழ்முற்போக்குக்கூட்டணி கொழும்பிலும், நுவரெலியாவிலும் இறுதி நாள் பொதுக்கூட்டங்களை நடத்தின. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் நுவரெலியா மாவட்டத்தில் இறுதி நாள் பரப்புரையை நடத்தியது.

மக்கள் பலம் தமக்கே இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகப் பெருமளவான ஆதரவாளர்கள் இறுதிக்கூட்டத்தில் பங்கேற்க வைக்கப்பட்டனர்.

நேற்றைய இறுதி நாள் கூட்டத்தில் உரையாற்றிய கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரும், தத்தமது கட்சியே வெற்றிவாகை சூடும் என்று சூளுரைத்தனர்.

தொகுதி, விகிதாசாரம் எனக் கலப்புமுறையில் நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவென்பதாலும், பிரதான கட்சிகளின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்ற தேர்தலாக அமைவதாலும் அனைத்து விதத்திலும் முக்கியத்துவம்பெற்ற தேர்தலாகப் பார்க்கப்படுகின்றது.

புலனாய்வுத்துறையினரின் ஆய்வுகளின் பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சிக்கான வெற்றி வாய்ப்பே பிரகாசமாக தென்படுவதாக எதிர்வுகூறப்பட்டுள்ளது. அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அதிர்ச்சியளிக்கும் வகையிலேயே தேர்தல் முடிவுகள் அமையும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மஹிந்த அணி குறிப்பிட்ட சில சபைகளைக் கைப்பற்றக் கூடும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோலோச்சும் என்றும், கிழக்கில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் வெற்றிவாகை சூடும் என்றும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கா.காந்தீபனிடம் தொடர்பு கொண்டு வினவியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்குப் பல்வேறு கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இன்று வரையான காலத்தில் 103 தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவைதொடர்பில் உடனடியாகக் கவனம் செலுத்தப்பட்டது – என்றார். (ஐ)

## தேசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.

மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை மாணவர் மத்தியில் நேற்றுப் பிரசுரமாக வழங்கப்பட்டது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் மக்களாகிய நாம் நாளை மறுதினம் மீண்டும் ஓர் உள்ளூராட்சித் தேர்தலைச் சந்திக்கின்றோம். மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சி சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ள மக்களுக்கு நன்மையளிப்பது கடினம். ஆகவே ஆட்சியதிகாரங்கள் மத்தியில் இருந்து அடிமட்டம் வரை பரவலாக்கம் செய்யப்பட வேண்டும். மற்றும் அடிமட்டத்தில் உள்ள மக்களும் கொள்கை உருவாக்கச் செற்பாடுகளில் ஈடுபட்டுத் தங்களைத் தாங்கள் ஆட்சி செய்யவேண்டும் என்ற நல்லெண்ண நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதுதான் உள்ளூராட்சி அமைப்பு முறையாகும்.

தமிழ் மக்களாகிய நாம் உள்ளூராட்சிஅமைப்புகளில் ஆட்சியமைத்துத் தத்தமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய அதே சமயம் தமிழ் மக்களின் தேசியம், இறைமை, சுயநிர்ணயம் என்பவற்றுக்கு வலுச்சேர்க்கக்கூடியவகையில் இவ் உள்ளூராட்சி அமைப்பு முறைகள் வடக்கு – கிழக்கு பூராகவும் இயங்கவேண்டும்.

2009இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின் எமது அரசியல்பலம்என்பதுமிகவும் சரிந்த வண்ணம் காணப்படுகின்றது. எமது இனம், கலாசாரம், பண்பாடு திட்டமிட்டுச் சிதைப்பதன் மூலம் எமது இருப்புக் குறித்து நிதர்சனமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

இவ் உள்ளூராட்சித் தேர்தலில் சகல வாக்களிக்கக்கூடிய தமிழ் மக்களும் தமது வாக்கை உங்களுடைய பிரதேசத்தில் – உங்களுடைய வட்டாரத்தில் – உங்கள்பிரதேசஅபிவிருத்தியில் உண்மையானஅக்கறைகொண்ட முழுமையாகத் தன்னை அர்ப்பணித்து மக்களுக்குச் சேவையாற்றக்கூடியவொருவரின் கட்சிக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். – என்றுள்ளது. (ஐ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, பம்பைமடுப் பகுதியில் முன்னர் இராணுவத்தினரின் சோதனை நிலையமாகப் பயன்படுத்தப்பட்ட தனியார் காணி ஒன்றில் இருந்தே இந்தக் கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

காணியின் உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்து கொண்டிருந்தபோது அங்கு குண்டுகள் இருப்பதை அவதானித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து அங்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் அவற்றை மீட்டுச் சென்றுள்ளனர். (ஐ-100)

## என் கருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

தேர்தல் காலங்களில் மட்டும் அறிக்கைகளை வெளியிட்டு வடக்கு முதலமைச்சர் கபட நோக்குடன் செயற்படுகின்றார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் நேற்றுக் காட்டமான விமர்சனத்தை முன்வைத்திருந்தார்.

இந்த விமர்சனத்துக்கு மறுபதில் வழங்கியபோதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

நான் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பில் அறிக்கை ஏதும் கொடுக்கவில்லை. என்னிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு எழுத்துமூலம் பதில் அளித்தேன். இவ்வாறு பல தடவைகள் அரசியல் சம்பந்தமாகக் கேள்விகள் கேட்கப்பட்டுப் பதில் அளித்துள்ளேன். ஊடகங்கள் தாமாகவே இது தேர்தல் தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கை என்று குறிப்பிட்டிருக்கின்றன. அது தவறு. அதையே சிலர் நம்பியுள்ளார்கள் போலத் தெரிகின்றது.

இன்றைய அரசியல் நிலைபற்றியே என்னிடம் கேள்வி கேட்கப்பட்டது. நான் அதற்குப் பதில் அளித்தேன். தேர்தல் பற்றி எங்குமே குறிப்பிடவில்லை.

ஆட்டுமந்தைகள் போல மக்கள் தங்களின் பின் வருவார்கள் என்று எம்மவர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் எனச் சொன்னதன் மூலம் மக்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்பதே நான் சொல்ல வந்த கருத்து. இதுபற்றி அர்த்தத்தை முழுமையாக விளங்கிக் கொள்ளாதது கவலையளிக்கிறது. ஒருவேளை மக்களை அவ்வாறு நினைத்துக் கொண்டிருந்தவர்கள் தாமாகவே முன்வந்து மன்னிப்பு கோருவதானால் அது வரவேற்கத்தக்கதே!

தேர்தல் காலங்களில் மட்டுமல்ல, நான் தொடர்ச்சியாக மக்களுக்காகக் குரல் கொடுத்து வருகின்றேன் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. தேர்தல் காலங்களில் மட்டுமே நான் கூறுவது சிலருக்குக் கேட்கின்றது. மற்ற நாள்களில் நான் கூறியவற்றை வாசிப்பதில்லை போலும் – என்றார். (ஐ)

## ரூ.2 கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராம் தங்க பிஸ்கட்டுக்களைச் சட்டவிரோதமாகக் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று காங்கேசன் துறைக் கடற்படையினர் தெரிவித்தனர்.

காங்கேசன்துறைக்கடற்பரப்பில் நேற்று முன் தினம் மாலை சந்தேகத்துக்கிடமான படகு ஒன்று தொடர்பாகக் கடற்படையினருக்குத் தகவல் கிடைத்தது. அதுதொடர்பில் கடற்படையினர் முன்னெடுத்த தேடுதலில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஒவ்வொன்றும் 100 கிராம் நிறையுடைய 37 தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட இருவரும் மாதகல் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து மீட்கபட்ட தங்கத்தின் பெறுமதி 2.2 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் மீட்கப்பட்ட தங்க பிஸ்கட்டுக்கள் தெல்லிப்பளையில் உள்ள சுங்கத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று கடற்படையினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பயணமே தேவைப்படுகின்றது. ஊழல்வாதிகளுடன் இனியொருபோதும் ஆட்சியமைக்கப் போவதில்லை.

இவ்வாறு நேற்று உறுதிபடத் தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

மக்களின் ஆணைக்கு அமையச் சகல குற்றவாளிகளையும் தண்டிப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இறுதி தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலனறுவையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தூய்மையான அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள, தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நாம் இணைந்துள்ளோம். இந்த நாட்டை அபிவிருத்தி அடையச் செய்ய, ஒன்றிணைக்க, நாட்டையும் நகரையும் கிராமங்களையும் அபிவிருத்தியடையச் செய்யும் தேர்தலாக மக்கள் இந்தத் தேர்தலை பயன்படுத்தவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நாம் பிரசாரத்தில் ஈடுபட்டபோது பெருந்திரளான தமிழ் மக்கள் என்னை ஆதரித்தனர். கிழக்கில் முஸ்லிம் மக்களின் ஆதரவும் அவ்வாறே இருந்தது. அம்பாந்தோட்டை, காலி, மாத்தறைக் கூட்டங்களிலும் மக்கள் நிறைந்து இருந்தனர். ஆகவே ஒருநாடாக, ஒரு குடையின் கீழ் மக்கள் அனைவரும் என்னுடன் இணைந்து செயற்பட்டுவருகின்றனர். ஒன்றாக நாட்டைக் கட்டியெழுப்ப மக்கள் தயாராக உள்ளனர் என்பது தெளிவாகியுள்ளது.

ஊழல் மோசடிகள் எந்தப் பக்கம் இருந்தாலும் யாராக இருந்தாலும் கட்சி, நட்பு, உறவு என்று எதையும் பார்க்காது குற்றவாளிகளுக்கு உயரிய தண்டனை வழங்குவேன். யாரையும் பழிவாங்க நான் நினைக்கவில்லை, யாரையும் விமர்சிக்கவில்லை. அதேபோல, தவறுசெய்யும் யாரையும் நான் பாதுகாக்கவோ, காப்பாற்றவோ தயாராக இல்லை. மக்கள் என்னை நம்புகின்றனர். மக்களின் நம்பிக்கையை நான் பொய்யாக்க மாட்டேன்.

எமது மக்களின் பாதுகாப்பே முக்கியமானது. அதற்காக சகல நாடுகளுடனும் நட்புறவைப் பேணி அவர்களுடனான உறவுகளை வளர்த்துக்கொள்ள முயற்சிப்பேன்.

இந்தநாட்டை ஜனநாயகரீதியில், மனித உரிமைகளைப் பாதுகாத்து மக்கள் நலன் கருதிய நாடாக நான் மாற்றியமைப்பேன். அதற்காக இந்தத் தேர்தலில் நாம் மிகப்பெரிய வெற்றியினை பெற்று நாட்டில் தூய்மையான பயணத்தைமேற்கொள்வோம் – என்றார். (ஐ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையில் அவர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தற்காலப் போக்குத் தொடர்பில் கடுமையாகச் சாடியிருந்தார். கூட்டமைப்பின் தலைவர்கள் திராணியில்லாதவர்கள் என்றும், பேரம்பேசும்வலு அவர்களிடம் இல்லை எனவும், மதையில் அவர்கள் செயற்படுகின்றார்கள் என்றும் விமர்சித்திருந்தார்.

புதிய அரசமைப்பு முயற்சி, இடைக்கால அறிக்கை என்பன தொடர்பிலும் அவர் தனது விமர்சனத்தை முன்வைக்கத் தவறவில்லை.

முதலமைச்சரின் இந்தத் தேர்தல் நேர அறிக்கை தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றுத் தொலைக்காட்சி ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டார்.

அதில் அவர் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு முதலமைச்சர் உள்ளூராட்சிச்சபைத்தேர்தல் தொடர்பில் வெளியிட்ட அறிக்கை கபட நோக்கம் கொண்டது. கடந்த மாகாண சபைத் தேர்தலில் தனக்கு வாக்களித்த மக்களை மந்தையாடுகள் என வர்ணித்து வடக்கு மாகாண முதலமைச்சர் கருத்து வெளியிட்டுள்ள கருத்துக்குப் பகிரங்க மன்னிப்பு கோருகிறோம்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலிந்து வேட்பாளராக்கிய போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்குஏற்ப பெரும் எண்ணிக்கையான மக்கள் வாக்களித்துப் பதவியில் அமர்த்தினார்கள்.

இவ்வாறு விக்னேஸ்வரனுக்கு மக்கள் வாக்களித்திருந்த நிலையில் வாக்களித்த மக்களை மந்தை ஆடுகள் என்கிறார் அவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பதவிக்கு வந்து தற்போதும் அந்தப் பதவியிலேயே ஒட்டிக்கொண்டு வடக்கு மாகாணசபையையும் வினைத்திறனாக இயக்காமல், வளர்த்த கடா மார்பில் இடிப்பது போன்று செயற்படும் முதலமைச்சர், சென்ற நாடாளுமன்றத் தேர்தலைப்போன்று இப்போதும் இறுதி நேரத்தில் கபட நோக்கோடு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

எனவே மக்கள் முதலமைச்சரின் கபடநோக்க அறிக்கையை நிராகரித்துத் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பயணிக்க வேண்டும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஒருபோதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராகச் செயற்படவில்லை, செயற்படவும் மாட்டாது. எனவே மக்கள் இந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் – என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# அர்ஜுன மகேந்திரன் எந்த நாட்டில் இருந்தாலும் கைது செய்வோம் என்கிறார் மஹிந்த அமரவீர!

கொழும்பு, பெப். 08

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் எந்த நாட்டில் இருந்தாலும் அவரால் தப்பிக்க முடியாது. உதயங்க வீரதுங்க போன்று அவரையும் கைது செய்ய முடியும். அத்துடன், பிணை முறி மோசடியுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்வோம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர சபையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மத்திய வங்கி மோசடி விவகாரத்தில் நாடகம் அரங்கேற்றப்படுகிறது என கூறப்படுகின்றது. இவ்வாறு கூறி ஜனாதிபதியை பலவீனப்படுத்த வேண்டாம். இது நாடகமல்ல. அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரஜாவுரிமையை நீக்க நாம் ஒத்துழைப்பு வழங்கமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் மத்திய வங்கிப் பிணை முறி மோசடி மற்றும் பெரிய ஊழல் மோசடி ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன் வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்திய வங்கிப் பிணைமுறி



மோசடியுடன் சம்பந்தப்பட்டவர்களை தற்போது கைதுசெய்துள்ளோம். இந்த விடயத்தில் நான் பெருமைப்படுகின்றேன். ஏனெனில் நான் முதலில் இந்த மோசடிக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்தேன்.

அப்போதும் முறைப்பாடு செய்வதற்குப் பலர் அஞ்சினர். எனினும் நான் அவ்வாறு இருக்காமல் முறைப்பாடு செய்தேன். மத்திய வங்கி மோசடி நடக்கவில்லை என்று எவராலும் கூற முடியாது. அது முற்றிலும் தவறாகும். இலங்கை வரலாற்றில் நடந்த பெரும் ஊழல் மோசடியே பிணைமுறி மோசடியாகும்.

இதனால், நாட்டின் பொருளாதாரம் மாத்திரமின்றிச் சர்வதேச உறவுகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் மக்கள் பாரதூரமான பாதிப்புகளுக்கு உள்ளாகினர். அதேபோன்று, 2008 முதல் 2015 ஆம் ஆண்டு வரைக்கும் இவ்வாறான மோசடி நடந்துள்ளது. எனவே இது தொடர்பிலும் நாம் விசாரிப்போம். இதற்காகத் தனி விவாதமொன்றையும் நடத்த நாம் தயாராக உள்ளோம் - என்றார். (கு)

# வடக்கு மக்களுக்கு உதவாதவர்கள் தேர்தலுக்கு மட்டும் வருகின்றார்கள்

## அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு

மன்னார், பெப். 08

எங்களால் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட வீடுகளிலும், கட்டடங்களிலும் அமர்ந்து கொண்டு, வடக்கு மக்களுக்கு எந்தவோர் உதவியையும் செய்யாத அரசியல்வாதிகளின் படங்களைக் கொழுவிக் கொண்டு, எமக்கெதிரான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து நான் சிரித்துக்கொண்டிருக்கின்றேன் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பெரிய மடுவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு முஸ்லிம்களுக்கு எந்த உதவியும் செய்யாத, செய்யவும் வக்கில்லாத அரசியல்வாதிகள் என்னை வீழ்த்துவதற்காக, எனது அரசியல் பலத்தை தகர்ப்பதற்காக, ஒவ்வொரு ஊரிலும் வேட்பாளர்களை நிறுத்தி, எமது கட்சிக்கான பிரதிநிதித்துவத்தை இல்லாமலாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும், கேவலமான அரசியல் கலாசாரத்தை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

முற்றாக அழிந்துபோன வன்னிப் பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதில் துளியளவும் உதவிசெய்யாத, இந்த அகதி மக்களின் அவலவாழ்வு தொடர்பில், எந்தவிதமான அக்கறையும் கொள்ளாத முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்கள் தேர்தலுக்கு மட்டும் இங்கே வந்து, நமது மக்களின் வேதனை குறித்து நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர்.

அகதி மக்களின் வாக்குகளால், கடந்த காலங்களில் ஏமாற்றிப் பெற்ற அதிகாரங்களால் தமது சுகபோகத்தை தேடிக்கொண்டவர்கள் இப்போது மீண்டும் அதே அதிகாரத்தைப் பெறுவதற்காகப் பாடாய்ப்படுகின்றனர்.

பெரியமடு, கரடிக்குளி, மறிச்சுக்கட்டி, பாலைக்குழி போன்ற எமது பிரதேசங்களில், காடழித்து முஸ்லிம்கள் அடாத்தாகக் குடியேறுகின்றனர்.

மக்கள் காங்கிரஸ் செய்த பணிகளை குற்றங் கூறுபவர்கள், விமர்சிப்பவர்கள், குறை காண்பவர்கள் இந்த மக்களின் விடிவுக்காக என்னதான் செய்திருக்கின்றார்கள்? நாங்கள் செய்வது பிழை என்றால் அவர்கள் செய்த அபிவிருத்திகள் என்ன?

இவர்களின் இந்த ஏமாற்று அரசியல் செயற்பாடுகள் இப்படியிருக்க, வன்னியைச் சேர்ந்த புதிய அரசியல்வாதி ஒருவர் எம்மை இப்போது மோசமாக விமர்சிக்கத் தொடங்கியிருக்கின்றார். இல்லாத பொல்லாத அபாண்டங்களை எல்லாம் அவர் பரப்புகின்றார்.

தாங்கள் அரசியல் செய்வதற்காக என்னையும், எனது பணிகளையும் கொச்சைப்படுத்தி குளிர்காய நினைக்கும் இவர்கள் தொடர்பில், வாக்காளர்களாகிய நீங்கள் விழிப்பாக இருக்க வேண்டுமென வேண்டுகின்றேன். - என்றார்

# மாயவனூர் வட்டாரத்திற்கான கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரம்!

கொழும்பு, பெப். 08

கிளிநொச்சி - வட்டக்கச்சி, மாயவனூர் வட்டாரத்திற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு மாயவனூர் கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்தில் நடை பெற்றுள்ளது.

கிளிநொச்சி - கரைச்சி பிரதேசசபைக்கான உள்ளூராட்சித் தேர்தலில் மாயவனூர் வட்டக்கச்சி இராமநாதபுரம் வட்டாரங்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பிரசாரக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மற்றும் பிரதேச வேட்பாளர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.




# அலோசியஸை சிறையில் சந்தித்த பிரமுகர்கள் யார்?

## விவரம் கோருகிறது ஜே.வி.பி.

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி விவகாரத்தில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸ், கசுன் பலிசேன ஆகியோரைச் சந்திக்கச் சிறைச்சாலைக்குச் சென்றவர்களின் பெயர்ப் பட்டியலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு ஜே.வி.பி. கோரியுள்ளது.

ஜே.வி.பியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி மோசடி தொடர்பாக விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பெரும் நிதிமோசடி தொடர்பான ஆணைக் குழுவின் அறிக்கை ஆகியன மீதான ஒத்திவைப்புவேளை விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகியது.

முதலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்தார். அடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றினார்.

ரக்னா லங்கா, மஹியங்கனை பிரதேச சபை மோசடி, வடமத்திய மாகாண முதலமைச்சு மோசடி உள்ளிட்ட பலவித மான மோசடி தொடர்பான விசாரணை அறிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாக மக்களுக்கும் மேலாகத் திரும்பி போடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை – பருத்தித்துறை பஸ்சேவை புஸ்வாணமானது

## காத்திருந்த மக்களுக்கு ஏமாற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 08

27 வருடங்களுக்குப் பின்னர் திறக்கப்பட்ட பொன்னாலை – பருத்தித்துறை வீதி ஊடாக நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட பஸ் சேவை நேற்றுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். நேற்றுத் தாம் பஸ்ஸுக்காகக் காத்திருந்து ஏமாற்றம் அடைந்தனர் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

போக்குவரத்தில் ஈடுபடுவதற்குப் போதிய பஸ்கள் இல்லாமையாலேயே அந்தச் சேவையை நிறுத்தியுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறை டிப்போ தெரிவித்துள்ளது என யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை யாழ்.வந்த ஜனாதிபதி மைத்திரிபால, வலி. வடக்கில் கடந்த 27 ஆண்டுகளாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பொன்னாலை – பருத்தித்துறை வீதி பொது மக்கள் பாவனைக்காகத் திறக்கப்படுகின்றது என அறிவித்திருந்தார்.

இதனையடுத்து, அந்த வீதி ஊடான பஸ் போக்குவரத்து நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக அரச அதிபர் மற்றும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிலையில், அந்த பஸ் சேவை தற்போது மீள நிறுத்தப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அரச அதிபரிடம் கேட்டபோது அவர் தெரிவித்தவை வருமாறு:–

இந்தப் பாதையூடான பஸ் சேவை இடம்பெறவில்லை என இராணுவத்தினரும் என்னிடம் தொடர்பு கொண்டு கேட்டிருந்தனர். இதன் பின்னரே நான் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவுடன் தொடர்பு கொண்டு பேசினேன்.

தேர்தல் செயற்பாடுகளுக்காகப் பத்திற்கும் மேற்பட்ட பஸ்களைத் தேர்தல் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளமையால் சேவையில் ஈடுபடத் தம்மிடம் பஸ் இல்லையென அவர்கள் என்னிடம் தெரிவித்தனர். எனினும், எதிர்வரும் திங்கட்கிழமையில் இருந்து சீரான பஸ் போக்குவரத்து நடக்கும் எனவும் அவர்கள் என்னிடம் கூறினார்கள் – என்றார். (ஐ–7)

# தேர்தல் பாதுகாப்புக்குப் பெரும் படையணி

கொழும்பு, பெப் .08

நாளை மறுதினம் சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலை அமைதியான முறையில் நடத்தி முடிக்க விடே பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ், பொலிஸ் விடே அதிரடிப் படையினர், கலகத்தடுப்பு பொலிஸார், சிவில் பாதுகாப்புப் படையினர், முப்படையினரை உள்ளடக்கியதாக இந்தப் பரந்த பாதுகாப்புக் கட்டமைப்புடன் கூடிய நடவடிக்கை நாளை முதல் அமுலுக்கு வரவுள்ளது.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் 4178 பொலிஸ் விடே அதிரடிப்படையினர் உள்ளிட்ட 65,758 பொலிஸ் அதிகாரிகள், உத்தியோகத்தர்களைக் கொண்ட படையணி கடமையில் ஈடுபடுத்தப்படுவதாகவும், அவர்கள் நேற்று அந்தந்தப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளுக்குச் சென்று கடமைகளைப் பொறுப்பேற்று 9 ஆம் திகதி முதல் தேர்தல் கடமைகளில் குறிப்பிட்ட பகுதிகளில் பணியில் ஈடுபடுவர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர தெரிவித்தார். (ஐ)



யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன் தினம் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.









Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.